Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 15 [ 30-07-1993 ] வெள்ளிக்கிழமை ஓசை 162

## பாதுகாப்பு முடிந்தவேளை தாக்குதல் நடந்தது

கடற்புலிகள் கிளாலிப்பகுதியில் பயணிகள் படகுகளுக்கு வழங்கும் பாதுகாப்பு நேரம் முடிவுற்ற.சில நிமிடத்தின் பின்னரே சிறிலங்கா கடற்படையினர் பயணிகள்படகுகள் மீது நேற்றுக் காலை தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான இவ் இரு படகுகளும் இயந்திரக் கோளாறு காரணமாக குறிப்பிட்ட நேரத்திற்குள் கரையை வந்து சேரவில்லை. இதுவே கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானதற்கு காரணம் என பயணிகள் தெரிவித்தனர்.

# சிங்கள கடற்படை வெறியாட்டம்; 8பேர்சாவு; 6பேரைகாணவில்லை

## கிளாலித் தாக்குதலில் காயமடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை கிளாலிக் கடலில் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் மூன்றுபெண்கள் உட்பட ஆறு பேர் அனுமதிககப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பயணிகள். சத்திரசிகிச்சைக்கு உட்பட்ட இவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தின் போதும் ஷெல் வீச்சின் போதும் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் பலர் பேசமுடியாத நிலையில் காணப்பட்டனர்.

கணபதிப்பிள்ளை கணேந்திரநாதன்(51) மல்லாகம்,

(09ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் நேற்று படையினரின் கோரத் தாண்டவத்திற்கு பலியான பொதுமக்களின் எட்டுப்பேரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டன. இவற்றில் அறுவரின் சடலங்கள் உறவினரால் அடையாளம் காணப்பட்டன.

அடையாளம் காணப்பட்டவர்களின் விபரம்- எஸ். ஏ. அசோகன்(35) கோண்டாவில், யோசப்பு ஜேசுநாயகம் தருமதாஸ் மண்டைதீவு, ஜெயந்தி கதிரவேலு (23) அச்சுவேலி, குப்புசாமி செல்லமுத்து கனகராயன்குளம் வவுனியா, சண்முகம் சபாநாதன் (63) செட்

[9ஆம் பக்கம் பார்க்க]

## படகிலிருந்த இளைஞன் படையினரால் கைது

(கிளாலி)

நேற்று கிளாலியில் கடற்படையினர் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலின் போது படகில்,இருந்த அப்பாவி இளைஞர் ஒருவர் கடற்படையினரால் உயிருடன் பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

பயணிகள் படகை கடற்படையினர் நெருங்கி வந்த போது கடலில் குதித்தவர்களை தவிர படகில் எஞ்சியிருந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் இவர்களில் சிலர் சமயோசிதமாக இறந்தவர்களின் சடலங்களிடையே மறைந்து தப்பிக்கொண்ட போதிலும் மேற்படி இளைஞர் கடற்படையினரால் உயி

[9ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலிக் கடலில் கோரச் சம்பவம்

(கிளாலி)

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தினர். வெறித்தனமாக நடத்தப்பட்ட இத்தாக்குதலில், எட்டு அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் படுகாயம் அடைந்தனர். இதேவேளை, கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சிக் கடலில் குதித்த ஆறு பேர்களைக் காணவில்லை.

நேற்று அதிகாலை 2.30மணியளவில்: ஆலங்கேணிப் பகுதியில் இருந்து பயணிகளுடன் அல்லிப்பளை நோக்கிப் புறப்பட்ட இரு படகுகளே கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகின. 31 பயணிகளுடன் புறப்பட்ட இப்படகுகள் சுமார் ஒரு மணித்தியாலப் பயணத்தின் பின் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக பாய்களின் உதவியுடன் வந்துகொண்டிருந்தன.

இந்நிலையில் இவ்விரு படகுகளையும் நெருங்கிய சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான ஐந்து பீரங்கிப் படகுகளும் பயணிகள் படகு மீது கண்மூடித்தனமாக பீரங்கித் தாக்குதலையும், துப்பாக்கிச் சூட்டினையும் நடத்தின. இதனால், எட்டுப்பேர் படகுக்குள்ளேயே பலியானார்கள். எட்டுப் பேர் படுகாயம் அடைந்தனர்.

இதேவேளை, படகில் இருந்த ஆறுபேர்கள் கடலில்குதித்தனர். படகில் இருந்த இளைஞன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. கடலில் குதித்த மற்றையவர்களின் நிலைபற்றி இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் எதுவுமில்லை.

யாழ். ஆஸ்பத்திரியில் படகில் பயணம் செய்தமீதி எட்டுப் பேரும் காயங்கள் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்:

இத்தாக்குதலினால் இவ்விரு படகுகளும் சேதமான அதேவேளை படகுகளின் ஓட்டிகள் நால்வரும் கடலில் குதித்தனர். இவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரைகிடைக்கப்பெறவில்லை.

மேற்படி சம்பவங்களில் சிக்கிப் பலியான எட்டுப் பேர்களினது சடலங்களும் அடையாளம் காண்பதற்காக யாழ்.

(9ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## உறவினர் நிலை அறிய மக்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் இடம் பெற்ற படுகொலையை கேள்வியுற்ற மக்கள் பலர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு கலவரம் அடைந்த நிலையில் முண்டியடித்து வந்தனர். இறந்த உறவினரை அடையாளம் காணவும், தாக்குதலுக்குள்ளான படகுகளில் தமது உறவினர்களும் வந்தனரா என அறியும் பொருட்டும் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

கியூவில் நின்ற மக்கள் பகுதி

[9 ஆம் பக்கம் பார்க்க]



கிளாலிக் கடலில் நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படையினரால் கோரமாகக் கொல்லப்பட்ட பொதுமக்களில் பெண்மணி ஒருவரின் சடலத்தை முதலாவது படத்திலும், வயோதிபரின் சடலத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நால்வரின் சடலங்கள் கரையில் வைக்கப்பட்டுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## வரி விளம்பரம்

### O/L. Yr. 10 வகுப்புகள்

O/L, Yr 10 விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, வர்த்தகம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது. சம்றொக் அக்கடமி, யாழ். சுண்டுக்குளி. (5562)

### வியாழ மாற்றம்

4-9-93 தொடக்கம் வியாழ மாற்றம் ஒரு வருடத்திற்கு உங்களுக்கு எப்படி? மேடம் 7ல் இடபம் 6ல், மிதுனம் 5ல், கடகம் 4ல், சிங்கம் 3ல், கன்னி 2ல், துலாம் 1ல், விருட்சம் 12ல், தனு 11ல், மகரம் 10ல், கும்பம் 9ல, மீனம் 8ல் உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தியுங்கள்- வேலணை சோதிடர் V. A. சிவராசா 152B அரசடிறோட், கந்தர்மடம். (5569)

### தேவை

¼″ (அங்குலம்) இரும்புக் கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½′ (அடி) க்கு மேல்இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-7098)

### ஸ்ரீகாந்த்புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மட்றாஸ் டிக்சனெறி) கொமிக்ஸ், மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-7071)

### தவறிவிட்டது

குமார் தையல் நிலையம், சிவன் கோவிலடி சுன்னாகத்தைச் சேர்ந்த குமார் அவர்களின் குவைத் அடையாள அட்டையுடன் கூடிய பேர்ஸ் ஒன்று பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திலோ அல்லது ஈழநாதம்காரியாலயத்திலோ ஒப்படைக்கும் படி தயவாகக்கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (5572)


## நிவாரண விநியோகம்

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச்சங்க பாவனையாளர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ஜூன்மாத நான்கு வார நிவாரண உலர் உணவுப் பொருள்களில் வழங்கப்படாத 'கைலன்ட' பால்மா பைக்கற்றுக்குப் பதிலாக தற்போது ஸ்ரீலங்கா பால்மாப் பைக்கற்றும், கோறா அரிசியும் வழங்கப்படுவதாகவும் இது வரை பொருள்களைப் பெறாதவர்கள் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் சங்கப் பதில் பொதுமுகாமையாளர் செல்வி செல்வவதனா தெரிவித்துள்ளார். [22]

## தெருக்கூத்து

ஆனையிறவு ஆ. க. வெ. நடவடிக்கையின் 2ஆம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினர் தெருக்கூத்துக்களை சுன்னாகம் பரந்தசதத்தில நடாத்தி வருகின்றனர். இக் கூத்துக்களை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். [11]

# உறுகாமம் பகுதியில் விறகு வெட்டத் தடை

உறுகாமம் பகுதியிலிருந்துதற்போது எவரும் விறகுகொண்டு செல்ல முடியாது என இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். உறுகாமத்தில் வசிக்கும் பலர் காட்டில் விறகு வெட்டி நகர்ப்புறங்களுக்குச் சைக்கிளில் எடுத்துச் சென்று விற்பனை செய்தே சீவியம் நடத்தி வந்தனர்.

உறுகாமம் சந்தியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரே இப்புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளனர். இதேவேளை செங்கலடிக்கு மேற்கே மகிழவெட்டுவான் கிராமத்தைச் சுற்றிவளைத்த படையினர் பெண்கள் பாடசாலை அதிபர் உட்பட 50 பேரைக் கைது செய்து முகமூடிக்கு முன்பாக நிறுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மனைவியையும், மகனையும் சி.வி.எப். நபர் குத்திக் கொலை

(மட்டக்களப்பு)

முன்னாள் குடிமக்கள் தொண்டர்படை (சிவிஎப்) யைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மனைவியையும், மகனையும் குத்திப் படுகொலை செய்த சம்பவம் ஒன்று மட்டக்களப்புப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

குடும்பச் சண்டை காரணமாகவே புன்னைச்சோலை என்ற இடத்தைச் சேர்ந்த மேற்படி நபர் கோமதி என்ற தனது மனைவியையும், மியோஜன் என்ற மகனையும் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளதாக மட்டக்களப்புப் பொலிசார் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவித்துள்ளனர்.


## கலை நிகழ்ச்சி

யாழ் வர்த்தகர் சங்கம்
சங்க வளர்ச்சிக்காக நடத்தும்

## நிதியுதவி நிகழ்ச்சி

இடம்: இளம் கலைஞர் மண்டபம் சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்: 07-08 93 சனிக்கிழமை
நேரம்: மாலை 3-30 மணிமுதல் இரவு 2-00 மணிவரை.
மங்கள விளக்கேற்றல்: யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்
பிரதம விருந்தினர்: புதுவை இரத்தினதுரை (கலை பண்பாட்டு கழக பொறுப்பாளர்)
சிறப்பு விருந்தினர்: திரு. கொ. க. ஆ. க. நடராசா முன்னாள் வர்த்தகர் சங்க தலைவர்)
திரு. பாலசிங்கம் (மாநகரசபை ஆணையாளர்)
திரு இ. வெங்கட்ராமன் (வர்த்தக வங்கி முகாமையாளர்)
திரு த. கோவிந்தசாமி (வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜ தலைவர்)
பரதநாட்டியம்: செல்வன் எம். அருள்மோகன்
திருமதி சுகந்தினி தயாசீலன்

சாந்தன் - ராஜன்ஸ் குழுவினர் முதன் முறையாக ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

இன்னிசை கானங்கள்

31-07-93 நடைபெற வேண்டிய நிகழ்ச்சி 07-08-93 அன்று நடைபெறும்.

வே. சிற்சபேசன் தலைவர் | நா. த. அன்னலிங்கம் செயலாளர்

வாழ்த்துபவர்:
லிங்கம் சில்க் கவுஸ்
18, 21, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (5571)


## நாடக விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி தமிழ் சங்கம் 31-07-1993சனிக்கிழமை நடாத்த இருந்த கலை விழா க. பொ. த (உயர்தரம்) பரீட்சை காரணமாக புரட்டாசி மாதம் நடுப்பகுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது நாடகவிழாவிற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(5570) அதிபர்


## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)
போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

## "தாயக கனவு"

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி6959)

## A/L 94

தூய, பிரயோக கணிதம்
ஆசிரியர்:
திரு. கிருஷ்ணா
ஆரம்பம்:
01-08-1993
சனி, ஞாயிறு பி. ப. 4 6 மணி

யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/7101)


## நினைவு கூருகின்றோம்...

## 1993-07-30

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - காக்கையன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-
**லெப். நிருபன்** [பொன்னுத்துரைகலாநிதி-வாரிக்குட்டியூர் - வவுனியா]
**முகிலன்** குழந்தைவேல் கணேசலிங்கம் - வாரிக்குட்டியூர்- வவுனியா]

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினர் பதுங்கியிருந்துமேற்கொண்ட தாக்குதலின்போதுவிழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**கப்டன் மகேந்தி** (தம்பையா பாலகிருஷ்ணன் - தென்னமரவடி - திருமலை]

திருமலை - கன்னியா பகுதியில் இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**காந்தி** (கந்தையா பரமநாதன் - 6-ம் வட்டாரம் - கும்புறுப்பிட்டி - திருமலை)

1989ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் நெடுங்கண்டல் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -
**கப்டன் சுசிலன்** [சந்தியோகு நாகராசா மோகன் - தட்சணாமருதமடு - மன்னார்]
**லெப். நிசாம்** [அந்தோனி இதயராசா லம்பேட் - வங்காலை - மன்னார்]

மன்னார் - அடம்பன் தாமரைக்குளம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்பெண் உட்பட 42 தமிழர்கள்.

புத்தூரில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வேம்பராய் வாசிகளான 03 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதபுரம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் எமைப் பிரிந்த -
**தினேஸ்** [— — தம்பிலுவில் - அம்பாறை]

திருமலை - பன்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -
**நவா** [பா. மகேந்திரன் - அன்புவழிபுரம் - திருமலை]

ஆனையிறவு - குறிஞ்சாதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனானசமரின்போது வீரச்சாவெய்திய-
**கானகன்** (கதிரவேலு சதீஸ்குமார் - 174 நீவில், உருத்திரபுரம் - கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**செந்தூரன்** (கந்தையா நாகேந்திரன் - சென்றல்கமம் - அம்பாறை)
**வீநாயகன்** (சித்திரவேல் மோகன் - கோயில்போரதீவு - மட்டு)
**முரளி** (சின்னத்தம்பி மோகன் - பன்குடாவெளி, தனவாய் - மட்டு)
**வசிதரன்** (குருகுலசிங்கம் சௌந்தரராஜன் - 9-ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை - மட்டு)
**நிருபா** (சறோசினி சதாசிவம் - பெரியகல்லாறு - மட்டு)
**சோழன்** (மாணிக்கராசா சிறிசங்கர் - ஈச்சந்தீவு, ஆலங்கேணி, கிண்ணியா—மட்டு)
**2-ம்லெப். காந்தருபன்** [பிரான்சிஸ் நெல்சன்- 310, என். சி. வீதி - திருமலை]
**சுலோஜன்** (சிற்சபை நிரஞ்சன் - நாயன்மார்திடல், தம்பலகமம் - திருமலை]
**லெப் கர்ணன்** [தம்பிராசா புவனேஸ்வரன் - புளியம்பொக்கணை பரந்தன் - கிளிநொச்சி)
**லெப். மயூரன் / அல்பிரட்** (சின்னத்துரை யோசப்கெனடி - ஊர்காவற்றுறை - யாழ்.)
**லெப். தாஸ்** (தேவலிங்கம் அன்ரனிதாசன் - மயிலிட்டி - யாழ்.)
**லெப். நியாஸ்** (செல்வரத்தினம் சங்கர் - கைதடி, நுணாவில் - சாவகச்சேரி - யாழ் )
**2-ம்லெப். நரேஸ்** (சபாரட்ணம் சிவபாதம் - நெல்லியடி மேற்கு, கரவெட்டி - யாழ் )
**ஜெயராமன்** (சந்திரசேகரர் உதயகுமார் - கைதடி கிழக்கு, சாவகச்சேரி -யாழ்.)
**கம்பன் / சக்தி** (நா. கனகராசா சத்தியகுமார் - காஞ்சிபுரம் வீதி, மாதகல் - யாழ்.)

யாழ் - வீமன்காமம் பகுதியில் தேசவிரோதிகளினால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட -
**ரஜீவன்** (குமாரசாமி ஜெயக்குமார் - புங்குடுதீவு - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7096)

# வன்முறைச் சூறாவளிக்குள் சிக்கியுள்ள தென்னாபிரிக்காவின் எதிர்காலம்

தென் ஆபிரிக்காவில் இன்று நடந்து வரும் மாற்றங்களை இவ்வுலகம் வெகு உன்னிப்பாக கவனித்து வருகிறது. ஏனென்றால் அங்கு ஒரு நீதியான-நிற வேறுபாடு அற்ற சனநாயக தென்னாபிரிக்காவை உருவாக்க நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் ஒரு மிக முக்கிய கட்டத்தை இன்று அடைந்துள்ளன இனி இங்கிருந்து எங்கே தென்னாபிரிக்க அரசியல் நகரப் போகிறது என்பது பல்வேறு ஊகங்கட்கு இடமளிப்பதாகவே உள்ளது. நிறவேற்றுமை, இனவாதம் என்பதை கைவிட்டு விட்டதாக 1990-ம் ஆண்டு தென்னாபிரிக்க வெள்ளையர் அரசு அறிவித்த பின் 1992-ம் ஆண்டு சருவசன வாக்கெடுப்பில் வெள்ளையர் இப்பாரிய மாற்றங்கட்கு தமது ஒப்புதலை அளித்த பின் கொடேசா 'codesa' எனப்படும் சனநாயக தென்னாபிரிக்காவிற்கான 26 கட்சிகள் கலந்து கொள்ளும் பல் கட்சி மாநாடு அங்கு ஆரம்பமானது. கறுப்பினக் குழுக்கள்' தமக்குள் மோதி மடியும் நிலைஏற்பட்ட போதும் வலதுசாரி தீவிரவாத வெள்ளையர் கடும் எதிர்ப்பு காட்டிய போதும்-பல கறுப்பினக் கட்சிகள் பேச்சுவார்த்தையை ஏமாற்று வேலை எனக் கடும் கண்டனம் தெரிவித்த நிலையிலும் - சனாதிபதி டி. கிளார்க்கினதும் நெல்சன் மண்டேலாவினதும் விடாப்பிடி காரணமாக பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன கடந்த மாதம்30-ம் திகதி வரலாற்று திருப்பம் வாய்ந்த முடிவொன்றினை பல கட்சி மாநாடு மேற் கொண்டது. 26 கட்சிகளில் 16 இம் முடிவிற்கு ஆதரவு தெரிவித்தன. தென்னாபிரிககாவில் மூதன் முறையாக 350 வருட வெள்ளையர் ஆக்கிரமிப்பை முடிவிற்குக் கொண்டு வரும் வகையில் எல்லாத் தரப்பினருக்கும் ஒருவருக்கு ஒருவாக்கு என்ற அடிப்படையில் பங்குபற்றும சனநாயக அடிப்படையிலான பொதுத் தேர்தலை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 27-ம் திகதி நடாத்துவது என்பதே அம் முடிவாகும்.

இம் முடிவினைத் தொடர்ந்து உலக மக்கள் மனதிலே தென்னாபிரிக்காவிலே கறுப்பின மக்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய நிலை உருவாகும் என்ற நம்பிக்கை துளிர் விட்டது புதிய ஏற்பாட்டின் படி இவ் வருடம் அக்டோபர் மாதத்தோடு இவ்வளவு காலமும் நிறவேற்றுமை அடிப்படையில் கறுப்பின மக்களை மிகக் கொடூரமாக நசுக்கிய கேவலத் தன்மைவாய்ந்த தென்னாபிரிக்க நாடாளுமன்றம் தனது ஆயுளை இழந்து விடும் என்றும் அதற்கிடையில் அடுத்த வருடம் தேர்தல் நடக்கும் வரை ஓர் இடைக்கால அரசியல் திட்டமொன்றினை இந் நாடாளுமன்றம் அங்கீகரிக்கும் என்றும், தேர்தலின் பின் தெரிவாகும் இடைக்கால நாடாளுமன்றம் தென்னாபிரிக்காவிற்கான புதிய, அரசியல் யாப்பை உருவாக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இவ்வாரம் மீண்டும் கூடவுள்ள பலகட்சி மாநாடு இடைக்கால யாப்பினை உருவாக்கும் எனவும் நம்பப்படுகிறது. இது ஒரு பக்கம்.

இந் நிகழ்வுகள் ஒரு புறம் நிகழ்ந்தேறும் அதே சமயம் இந் நிகழ்வுகளின் அடிப்படைகளையே ஆட்டம் காணச் செய்யும் வகையில் தென்னாபிரிக்காவின் எதிர்கால நம்பிக்கையை முளையிலேயே கருகச் செய்யும் வகையில் பல வன்முறைகள் பக்கம் பக்கமாக அங்கு அரங்கேறுகின்றன. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து மீண்டும் வன்முறைகள் புதிய உச்ச நிலையை அடைந்துவிட்டன. யூலை 7-ம் திகதி மட்டும் யோகானஸ்பேர்க்கைச் சுற்றி 116 கறுப்பர் தமது உயிரை இழந்தனர். இன்றுவரைமொத்தம் 200 கறுப்பர் தமது குழு மோதல்களில் பலியாகினர், இதைவிட மிக மோசமான செய்தி இக் கட்டுரை எழுதப்படும் போது வெளியாகியது. அதுதான் கேப்டவுனில் வெள்ளையர் தேவாலயம்ஒன்றினுள் ஞாயிறு வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வெள்ளையர் ஆயுதம் தாங்கிய குழுவினால் சுடப்பட்டமை ஆகும். இதில் 11 வெள்ளையர் பலியாகினர் இதன் விளைவுகள் விபரீதமாகப் போகின்றன என உலகமே இன்று அஞ்சத் தொடங்கி விட்டது. இவ்வாறாக எல்லாத்தரப்பிலும் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்காக கடும் முயற்சிகள் - அவை படுகொலை வடிவங்களிலேயே வெளிப்படுகின்றன. எனவே மீண்டும் நெருக்கடி. இன்று அரங்கேறும் கொலைப்படலங்கள் விரிவடைந்து தென்னாபிரிக்க எதிர்காலத்தை சிதைத்து விடுமோ என்பதே இன்றைய கவலைக்குரிய செய்தியாக உள்ளது.

இதிலுள்ள பெரும் வியப்பு என்ன என்றால் அடுத்த வருடம் நடைபெறும் தேர்தலை வலது சாரி தீவிரவாத வெள்ளையர் கட்சிகளான பழமை பேண்கட்சி (C.P - Conservative Party) உட்பட A.W.B எனப்படும் (Afrikanen Resistance Movement) வெள்ளை இன தீவிரவாத அமைப்புக்கள் மட்டுமே எதிர்க்கவில்லை பல மிக்க சூலு கறுப்பினக் குழுக் கட்சியான இன்காதா சுதந்திரக்கட்சியின் தலைவரான புத்தலேசியும் எதிர்ப்பதுதான் விந்தை தீவிரவாத வெள்ளையர் நிலையோ மிக விசித்திரமானது தாம் ஆண்டபோது கறுப்பின மக்களை மிக மோசமாக ஒடுக்கியவர்கள் தமக்கு தன்னாட்சி அடிப்படையில் வெள்ளையர், இந்தியர், என்றும் கறுப்பர்கள் தமக்கிடையில் பல இனக் குழுக்களாகவும், வெள்ளையரோ மிதவாதிகளாகவும் வலது சாரி தீவிரவாதிகளாகவும் பல பிரிவுகளாக உள்ளனர். இவர்கள் யாவரும் புதிய எதிர்கால தென்னாபிரிக்காவில் தமது இடத்தை உறுதிப்படுத்த முயல்வதே இக் குழப்பங்களுக்குக் காரணமாகின்றன என்பது இவர்கள் கருத்து. அவ்வாறாயின் மத்தியில் அதிகாரம் குவிக்கப்பட்டாத- அதிகாரப் பகிர்வினைக் கொண்டதாக - ஒற்றையாட்சி முறையல்லாத கூட்டாட்சி முறையிலமைந்த ஓர் ஆட்சி முறையே எதிர்கால தென்னாபிரிக்காவிற்கு உகந்தது என்பதே இவர்கள் நிலைப்பாடு. ஆனால் இங்குள்ள பெருத்த முரண்பாடு என்னவென்றால் தென்னாபிரிக்காவில் எதிர்கால ஆட்சியை அமைக்கப் போகும் வலுப்பெற்ற கறுப்பின பெரும்பான்மை கட்சியான ஆபிரிக்க தேசியக் காங்கிரசோ இக் கருத்துக்களை முற்றாக நிராகரிக்கின்றமையே ஆகும். இவர்கள் எதிர்கால தென்னாபிரிக்கா என்பது மிக இறுக்கமாக இறைமை கொண்ட மத்தியில் மிக வலுவான ஆட்சியமைப்பைக் கொண்ட ஒற்றையாட்சி முறையை கொண்டதாகவே அமைய வேண்டும் என விரும்புகின்றனர். இல்லாவிட்டால் வெள்ளையரின் பிரித்தாளும் தந்திரத்திற்கு இரையாகி தென்னாபிரிககா சிதைந்து பலவீனமுற்று விடும் என்பதும் கறுப்பு இனத் தாயகப்பகுதிகள் அல்லது வெள்ளை இன தாயகப் பகுதிகள் என்பது ஒரு சதி வலையே என மண்டேலாகட்சியின் தீவிரப் போக்குள்ளோர் கருதுகின்றனர். ஏனென்றால் நாட்டின் தலைவராக எதிர்காலத்தில் அமையப் போகும் சனாதிபதிப் பதவி என்பது ஒரு சுழற்சி முறையில் அமைய வேண்டும் என கிளார்க்கின் கட்சி விரும்பும் அதே சமயம் A.N.C.யோ மக்களால்தெரிவு செய்யப்பட்ட - மாற்றப்பட முடியாத ஒரு தனிப்பதவியாக சனாதிபதிப் பதவி அமைய வேண்டும்என விரும்புகின்றது. எனவே இப்போக்கானது எதிர்காலத்தில் பூரண அதிகாரங்களைக் கொண்ட ஒரு சருவாதிகாரப் போக்குள்ள ஒரு கட்சி ஆட்சி முறைக்கு வழி வகுக்கும் என A N.C. எதிர்ப்பாளர் கருதுகின்றனர். ஆனால் ஆபிரிக்க தேசிய காங்கிரசைப் பொறுத்தவரையில் அவர்கள் இதுவரை கறுப்பு இன மக்கள் பட்ட துயரைத் துடைக்கவே விரும்புவதால் ஒரு சிக்கலான அரசியல் சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே இன்று முழு உலகமும் இத்தகைய பல வேறுபாடுகளைக் கொண்ட தென்னாபிரிக்க சமூகம் எவ்வாறு தனது சிக்கலை தீர்க்கப் போகின்றது என்பதைக் கவனிப்பதன் நோக்கம் இப்பரிசோதனை முயற்சியிலாவது ஏதும் நல்ல முடிவுகள் கிடைக்காதா என எதிர்பார்ப்பதேயாகும். ஏனெனில் குறிப்பாக பல்வேறு இன மோதலால் சிதறுண்ட உலகம் வழிகாட்டியான முடிவுகளை எதிர்பார்க்கின்றது. அதுபோலவே ஒரு தேசிய அரசை உருவாக்கும் நிலையிலுள்ள கறுப்பின மக்களின் முடிவுகள் பல்வேறு இனக் குழுப் பிரச்சினைகளில் முட்டி மோதும் தென்னாசியப் பிராந்தியத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமையக் கூடும், அல்லது வழி தவறிப் போய் எச்சரிக்கையாகவும் அமையக் கூடும். இது இனி வரலாறுகாட்டவேண்டியசெய்தி.

இத்தகைய அரசியல் பிளவுகள் தென்னாபிரிக்க சமூகத்தின் உண்மையான யதார்த்த நிலையையே பிரதிபலிப்பதாக கருதும் சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுவது கவனத்திற்குரியதாகின்றது. தென்னாபிரிக்கா நிற இன அடிப்படையில் கறுப்பர்,

**பாலகுமாரன்**

தாயக உரிமை (White Home Lands) உண்டு என வாதிடுவது தான் அதேசமயம் நிறவேற்றுமை நிலவிய காலத்தில். கறுப்பின மக்களை இனக்குழு அடிப்படையில் பிரிப்பதற்காக வெள்ளையரால் உருவாக்கப்பட்ட கறுப்பின தாயகப்பகுதிகள் எதிர்காலத்தில் இல்லாது போய்விடும் என்ற அச்சத்தில் இவற்றினை ஆண்ட கறுப்பின குழுத் தலைவர்கள் நெல்சன் மண்டேலாவின் புதிய நிறவேற்றுமையற்ற தென்னாபிரிக்காவிற்கு கடும் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். தென்னாபிரிக்க வெள்ளையரில் சூலு இனக் குழுவிற்கு எனத் தனியாகஉருவாக்கப்பட்ட குவாசுலு (Kwazulu) பகுதியை கைவிட விரும்பாத புத்தலேசி சென்ற வாரம் தான் பல் கட்சிப்பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறுவதாக அறிவித்து விட்டமை பெரும் நெருக்கடியை உருவாக்கி உள்ளது. அதுபோலவே வெள்ளை இன பழமை பேண் கட்சியும் பேச்சுவார்த்தையிலிருந்து இம் முக்கிய கட்டத்தில் விலநுவதாக அறிவித்துவிட்டது இவற்றினைவிட ஏனைய சில கறுப்பினக் குழுக்கள் தமது தாயகப் பகுதிகள் சுதந்திரமானவை என்றும். தன்னிறைவு உள்ளவை என்றும், எதிர்கால தென்னாபிரிக்காவிலிருந்து பிரிந்து தனியான பகுதிகளாக இயங்கப் போவதாக வேறு மிரட்டி வருகின்றனர். இவை ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு இன்று பரம வைரிகளாக மாறி விட்டன. குறிப்பாக சிஸ்காய் (Ciskei) போபுத்வானா (Bophuthatswana) போன்ற கறுப்பு இனத் தாயகப் பகுதிகள் இம் முடிவினை மேற்கொள்ளும் சாத்தியங்கள் இருப்பதாக கருதப்படுகின்றது.

# கணனிகளை தாக்கும் வைரஸ்

'வைரஸ்'. இதனால் ஏற்படும் நோய்களை மாற்றுவது கடினம். தடிமனிலிருந்து எயிட்ஸ் வரை வைரசினால் ஏற்படும் நோய்கள் மனிதரை தாக்குகின்றன. இவ்வாறே கணனிகளை தாக்கி சேதப்படுத்தும் ஒரு கொடிய நோயை ''கணனி வைரஸ்'' என்றே விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.

'கணனி வைரஸ்' என்பது உண்மையில் ஒரு கிருமி அல்ல. இவை கணனிகளின் பௌதிகப் பாகங்களை தாக்குபவையும் அல்ல. ஆனால் இவை கணனி நிகழ்ச்சித் திட்டங்களையும் [Programs] கணனியில் பதிவு செய்து வைத்திருக்கும் தரவுகளையும் [Data] முற்றாக அழித்து விடக் கூடியவை. அல்லது அவற்றில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியவை. இதனால் கணனிகள் செயலிழந்து விடும் ஆபத்துக்கூட உண்டு. முக்கியமாக பெரும் செலவில் சேகரிக்கப்படும் தகவல்கள் இவற்றால் அழிக்கப்படுமானால் பெரும் நட்டம் ஏற்படும்.

இந்த கணனி வைரஸ்கள் பெரும்பாலும் தாமாக உருவாகுபவையல்ல. சில விசமிகளால் கணனி நிகழ்ச்சித் திட்டமாக உருவாக்கப்பட்டு பரப்பப்பட்டு வருகின்றன. அல்லது கணனிப் பயிற்சி பெறும்போது கண்டவாறு ஆளிகளை [Key] அழுத்துவதனால் ஏற்படக்கூடும் எனவும் அறியப்பட்டுள்ளது.

இன்று கணனிகளைப் பாதிக்கின்ற பல்லாயிரக் கணக்கான வைரசுகள் உள்ளன. 'ஜெருசலம்பி' என்கின்ற வைரஸ் 13-ம் திகதி வெள்ளிக்கிழமையாக இருக்கின்றபோது தனது அழிவு வேலையைச் செய்யும் சில வைரசுகள் காலை வணக்கம் (Good morning) சொல்லும்போது கணனியை உபயோகிப்பவர் காலை வணக்கம் சொல்லாவிட்டால் தனது அழிவுவேலையைச் செய்யும்.

இவற்றை ஒழிக்க உலகிலுள்ள கணனி விஞ்ஞானிகள் ''தடுப்பு மருந்துகளை'' கண்டு பிடிப்பதில் முயன்று வருகின்றனர். இவ்வாறான தடுப்பு மருந்துகளைக்கொண்ட கணனிகள் இன்று சந்தைக்கு வந்துவிட்டன இந்த தடுப்பு மருந்துகளும் நிகழ்ச்சித் திட்டங்களாகவே (Programs) அமைகின்றன.

வைரஸை உருவாகுபவர்கள் அவர்களாக திருந்தினால் ஒழிய வைரஸ்களை முற்றாக ஒழிப்பது கடினம் என கணனி விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## சிறுகதை

# முள்முருக்கு

சொக்கன்

வீட்டுத் தாழ்வாரத்துக்கு முன்னால் அந்த முள் முருக்கு மதாளித்து வளர்ந்து கிளைகள் பல விட்டு நின்றது. இலைகளின் பச்சைக்கிடையே இரத்தச் சிவப்பில் கொத்துக் கொததாய்ப் பூக்கள்.

"என்ன? முருக்க மரத்தை வைச்ச கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நிக்கிறீர்? ஏதேன் விசேஷம்?" என்று பாஸ்கரன், தன் மனைவி உமையாளைக் கேட்டான்.

"முருக்க மரமோ? கன்னிக்கால் எண்டு சொல்லுங்கோ" என்றாள் உமையாள்.

பாஸ்கரனின் நினைவுகள் ஐந்து ஆண்டுகளைப் பின் தள்ளிச் சென்றன. பொன் உருக்கியபின்பு தங்கள் வீட்டிலே கன்னிக்கால் நாட்டியதும் தொடர்ந்து மணமகளான உமையாள் வீட்டிற்கு அவன் தமையனும் உறவினரும் வந்துஅந்த முள்முருக்கை-கன்னிக்காலை - நாட்டி நீருக்குப் பதில் பாலூற்றி நவதானியங்களும் இட்டதும்.....

அப்பொழுது அது மெல்லிய கதிகால் அளவிலேதான் இருந்தது. அதற்குப் பின்பு தண்ணீர் காணாவிட்டாலும் தன் போக்கிலே வளர்ந்து இன்று பெருமரமாய் நிற்கிறது. அவர்களின் திருமணத்தின் புனித நினைவுச் சின்னம் இந்த ஐந்து ஆண்டுகளிலே இரண்டு பெண் குழந்தைகள் தனக்கு முன்னால் தளர்நடையிட்டதும், மழலை பேசியதும் எல்லாம் அதற்குத் தெரியும். ஆனால் அது பேசாமடந்தை.

"இந்தக்கன்னிக்கால் வரிசையிலை இன்னொரு துணையையும் கெதியிலை சேர்த்து வைக்கப் போறம்."

உமையாளின் வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவையாயிருந்தன. அவை பாஸ்கரனின் நெஞ்சிலிருந்து பெருமூச்சை வரவழைத்தன.

"சீதனம் பற்றி 'ஈழநாதம்' பேப்பரிலை வாறதைப் படித்தனியள்தானே, இது பற்றி உங்கடை அபிப்பிராயம் என்ன?" கடந்த இரவு தன் பிள்ளைகளை நித்திரையாக்கி விட்டு, பாஸ்கரனின் பக்கத்தில் வந்தமர்ந்த உமையாள் கேட்ட கேள்விகள் இவை.

பாஸ்கரன் உடன் பதில் அளிக்கவில்லை. அவன் சுபாவம் அது. எந்தக் கேள்வியானாலும ஆரஅமர யோசித்து நிதானமாக, ஆனால் தீர்க்கமான பதில் அளிப்பவன் அவன். இது உமையாளுக்குத் தெரிந்தது தான். அவள் பொறுமையோடு அவனுடைய பதிலுக்குக் காத்திருந்தாள்.

"உமை, நீர் பி. ஏ. க்குத் தமிழ் ஒரு பாடமாய் எடுத்தனீரல்லோ?"

"ஓம அதுக்கென்ன?"

"நான் தமிழிலை எம். ஏ. செய்தனான்."

"இதென்ன சுத்தி வளைச்சுப் பேச்சு? நான் கேட்டது சீதனத்தைப்பற்றி."

"அவசரப்படாதையும். சங்க காலத்திலை எங்கடை மூன்னோர்..."

"உதென்ன சங்க காலக் கதை? சீதனத் தடுப்புச் சட்டம் வரவேணும், பெண்கள் சீதனத்துக் கெதிராய் ஒண்டு திரண்டு போராட வேணும் என்கிறாங்கள். நீங்கள் பழங் கதை பேசிறியள்."

"சுடுதுமடியைப் பிடி எண்டு நீர் அவசரப்பட்டால் நான் சொல்லுறத்துக்கு ஒண்டுமில்லை."

"சரி சொல்லுங்கோ."

"தலைவியைத் தலைவன் காதலிச்சு அவளுக்குத் 'தழை' எண்ட இலைகுழை மாலை செய்த ஆடை பரிசளிச்சு பிறகு அவளைக் கலியாணம் செய்வான். கலியாணத்துக்குத் தலைவியின்ரை பக்கத்திலை தடை வந்தால் அவைக்குத் தெரியாமல் தலைவியை உடன் கூட்டிப் போய்த் தலைவன் குடித்தனம் நடத்துவான்."

"உதுக்கும் சீதனத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"கலியாணத்துக்குப் பிறகு தான் தன்ரை குடும்பத்தையும், உற்றாரையும், உறவினரையும் காப்பாத்தப் பொருள் தேடி வெளியூர்களுக்குத்தலைவன் போவான். தலைவியைப் பிரியிற துக்கம், போற இடத்திலை வழிபறிக் கொள்ளைக்காறன்காளாலை உயிராபத்து, சிலவேளை மரணம் கூட ஏற்படும். இந்த நிலையிலை தலைவனை நம்பி அவன்ரைகைபிடிச்சவள் படப்போற அவலத்துக்கு அளவேயிருக்காது. பொருளாதாரப் பாதுகாப்பில்லாமல் அந்த அப்பாவிப் பெண் கஷ்டப்படாமலிருக்கப் பிற்காலத்திலை அவளின்ரைபெற்றோர் செய்த ஏற்பாடுதான் இந்தச் சீதன வழக்காமாய் இருக்கவேணும்"

"அப்படியெண்டால் சீதனம் கொடுக்கிறதும் வாங்கிறதும் நல்லது எண்டு சொல்லிறியளோ?"

"உதுபற்றிப் பிறகு சொல்லுறன். இப்ப உம்மிட்டை ஒரு கேள்விகேட்கப்போறன்"

"கேளுங்கோ".

"தாய் தகப்பன்ரை கடைசிக் காலத்திலை அதுகள் படுக்கையாய்க் கிடக்க நேர்ந்தால் அதுகளை வெறுக்காமல் சலிக்காமல் கவனமாய்ப் பாக்கிறது ஆர்? மகனோ மகளோ?

"மகள்தான் எண்டு சொல்லவும் வேணுமே? மகனுக்குப் பெத்தவையிலை பற்றுப் பாசம் இருந்தாலும் அவனுக்கு வாய்க்கிறவள் நல்லவளாயிருந்தால்தான் மாமன் மாமியைக் கவனமாய்ப்பாப்பாள். மகள் அப்பிடியில்லைத் தானே? அதோடை பெத்த மகளை உரிமையோடை கேட்டுப் பெறுகிற உதவியை மருமகளிட்டைக் கேக்கக் கூச்சம் இருக்குமல்லோ"

"சரியாய்ச் சொன்னீர். தங்களின்ரை கடைசிக்காலத்திலை தங்களைப் பார்க்க மேய்க்க எண்டு பெற்றதுகள் தங்கடை பெம்பிளைப் பிள்ளையளுக்குக் கொடுக்கிறது தான் சீதனம். ஒருவகையிலை இது பெற்றாரின்ரை சுயநலம் எண்டு கூடச் சொல்லலாம்".

'இந்தக் காலத்துக்கு இது பொருந்துமெண்டு நான் நினைக்கேலை. முந்தின காலத்திலை ஆண்கள் தான் உழைக்க வெளியிலை போச்சினம் இப்ப பெண்களும் உழைக்க வெளியிலை போகினம் அவை வீட்டிலை இருந்து பகல் இரவெண்டு பாராமல் தாய் தகப்பனைப் பாக்கிறது முடியிறகாரியமே? இப்ப என்னையே எடுத்துக்கொள்ளுங்கோ. நான் ரீச்சர். நீங்களும் ரீச்சர். நான் அம்மாவை அவவுக்கு திருப்திதரக்கூடிய மாதிரி வைச்சுப் பராமரிப்பன் அவவின்ரை கடைசிக்காலத்திலை எண்டு நான் நினைக்கேலை"

"உதைத்தான் நான் சொல்ல வந்தனான். எவ்வளவுதான் பற்றுப்பாசமிருந்தாலும் ஒருத்தரிலை மற்றவர் தங்கியிருக்காத சமுதாய அமைப்பு வரவேணும். கூட்டு குடும்பமுறை இந்த அமைப்புக்குத் தடை. அதை ஒழிக்க வேணும்."

"அது எப்பிடி?"

"சொல்லிறன். ஆணோ, பெண்ணோ தங்களுக்கு வயசு வந்து உழைக்கிற காலத்திலை தங்களுக்கெண்டுஉழைப்பிலை ஒரு பகுதியைச் சேமித்து வைக்க வேணும். அரசாங்கமோ, சமூக நிறுவனங்களோ அவையின்ரை சேமிப்பைப் பொறுப்பேற்று அவை உழைக்கேலாத காலத்திலை ஓய்வூதியம் வழங்க வேணும். ஆணோ, பெண்ணோ சீவிப்பதுக்கு அவை குடும்பமாய்ச் சேர்ந்து வாழத் தொடங்கேக்கை அவையின்ரை சேமிப்பிலை அவைக்கெண்டு வீடொண்டு அரசோ, நிறுவனங்களோ அமைச்சுக் கொடுக்க வேணும். பெண்கள் நகையாசையை விடவேணும்".

"இந்தக் காலத்திலை ஆண்களும் கழுத்துச் சங்கிலி, கைச் சங்கிலி, மோதிரமெண்டு போட்டுக் கிலுக்கேக்கை பெண்களுக்கு நகையாசை எப்பிடி விட்டுப் போகும்? சொல்லுங்கோ."

'நீர் சொல்லிறதும் ஒரு வகையிலை உண்மைதான் காலாதிகாலமாய் இரத்தத் தோடை ஊறிவிட்ட சில ஆசையளைத் திடீரெண்டு களையிறது முடியாது தான். ஆனால் சட்டத்தாலையோ செயற்கையாய் - தற்காலிகமாக - ஆக்கிற எதுவும்நிலைக்காது எண்டது தான் என்ர வாதம். மனம் திருந்த வேணும், மனப்பான்மை மாற வேணும். சமுதாய உணர்ச்சி வளரவேணும். தானுண்டு தன் குடும்பமுண்டு என்ற சுயநலமில்லாமல் பொது நன்மையைக் கருதி வாழிற சமுதாய அமைப்பும் அதுக்கு வழிகாட்டிற அரசும் வரும் வரையிலை சீதனப்பழக்கம் தொலைகிறது. நடவாத காரியம் எண்டு தான் நினைக்கிறன்"

"நீங்கள் நினைக்கிறதுஇருக்கட்டும். இப்ப உங்கடை தங்கச்சியின்ர விசயத்துக்கு வருவம்."

'அவளும் பட்டதாரி. படிக்கிறாள்.'

'பட்டமும் படிப்பும் தானே இப்ப பெரிய அவஸ்தை.' அவவுக்கு ஒரு வழ்க்கை அமைகிறதுக்கு வெறுங்கை முழம் போடுமே?"

பாஸ்கரன்மௌனமானான்.

சிறுவயதிலேயே தகப்பனை இழந்தது, தாயும் தன்னும் ஆறுவயதே மூத்த தமையனும், கன்னிப்பருவம்இன்றோ நாளையோ என்று எதிர்பார்த்துக் காத்திருந்த தங்கையும் கைக்குழந்தையான கடைக்குட்டித் தங்கையும் அநாதைகளாகிப் பரிதவித்தது. தமையன் குடும்பத்துக்காகத் தனது படிப்பையும் இடையிலே கைவிட்டு மெக்கானிக் பயிற்சிக்குப் போனது, அவனும், தாயும் ஓடாய் உழைத்துபாஸ்கரனையும் தங்கைமாரையும் படிப்பித்துப் பட்டதாரிகளாக்கியது......

இதற்கிடையிலே பாஸ்கரனின் தமையனுக்கு நாற்பது வயதாகிவிட்டது. தாயும் தம்பியும் தங்கைகளும் எவ்வளவு வேண்டிக்கொண்டும் அவன் திருமணத்துக்கு உடன்படாது பிரமச்சாரியாகவே நிலைத்துவிட்டான். காரணம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். குடும்பத்தைப் பொறுத்தவரையில் அவன் ஒரு மெழுகுதிரி.

அவனது அயராத முயற்சியால் பாஸ்கரனுக்கும் உமையாளுக்கும் பாஸ்கரனின் தங்கை பாஸ்கரிக்கும் உமையாளின் தமையன் சதீஸ்வரனுக்கும் உரிய காலத்தில் திருமணம் நடந்தேறியது. மாற்றுச் சம்பந்தம்.

கொட்டிலைப் புதுமோடி வீடாக்கியதும் உமையாளின் வெற்றடம்பை நகைதாங்கியாய் ஆக்கியதும் பாஸ்கரனின் தமையனது தியாகத்தில் நடந்து முடிந்தவை நாற்பது வயதிலேயே தலைநரைத்து கண் பார்வை மங்கி உடல் தேய்ந்த நிலையிலும் வாடகை வீடொன்றில் வயதான தாயுடனும் தங்கை ரஞ்சினியுடனும் வாழ்ந்து வரும்அவனைப் பாஸ்கரனால் சாதாரணமனிதனாக நினைத்துப் பார்ப்பதே முடியாத காரியம் அவன் வரையில் தமையன் தெய்வம்!

ஆனால் அந்தக் தெய்வத்தைத் தனது கடைசித்தங்கைக்கும் வாழ்வளிக்கக் கேட்டு மேலும் வருத்துவது கொடுமையிலும் கொடுமை!

"இஞ்சபாருங்கோ றஞ்சினிக்கு நீங்கள் பேசின மாப்பிளையையே செய்து வைப்பம். என்ர அண்ணையின்ர குணம் உங்களுக்குத் தெரியுந் தானே எச்சிறகையாலை காக்கையையும் ஒட்டாத கஞ்சன். எங்களைப்போலை பிள்ளை குட்டி எண்ட பிடுங்கல் இல்லாட்டாலும் அவரிட்டை அதிகம்எதிர்பார்க்கமுடியாதுமாப்பிளை வீட்டார் வீடும், நகையும் ஒரு லட்சம் காசுந்தானே கேட்கினம்?எங்கடை வீட்டை எழுதிக்கொடுப்பம். அண்ணையிடை எப்பிடியெண்டாலும் சண்டைபோட்டு இரண்டொரு நகையை அவற்றை பொறுப்பிலை செய்விக்கிறன். எங்கடைசேமிப்புக்கணக்கிலை பாங்கிலை ஐம்பதுவரையிலை இருக்குதுதானே? மிச்சத்தைக் கடனோ உடனோ பட்டுச் சமாளிப்பம். உங்கடை அண்ணை கலியாணச் செலவைத் தான் பாக்கிறனெண்டு சொல்லிறார். றஞ்சினியிட்டை இரண்டு சோடி காப்பு, நாலுபவுண் சங்கிலி, மோதிரம் இருக்குது தானே? இன்னும் ஏனயோசிக்கிறியள்? ஓமெண்டு சொல்லுங்கோ. உந்தச் சம்மந்தத்தைக் கைவிடக் கூடாது. மாப்பிள்ளை பட்டதாரி இல்லையெண்டால் என்ன? சாதாரணகிளாக் எண்டாலும் கண்ணுக்கு லட்சணமான ஆள். குணமும் நல்லது எண்டு சொல்லினம் என்ன?"

உமையாளின் தீர்க்கமான முடிவும் வேண்டுதலும் பாஸ்கரனின் நெஞ்சுக்கு இதமாய் இருந்தன.

தங்கையிலே பாசமும் அவளின் எதிர்காலச் சிறப்பில் பேராசையும் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பாஸ்கரனுக்கு இருப்பது நியாயம்

ஆனால்... பாஸ்கரிக்கு...? தன் தமையனோடு அவளையும்..? தெய்வம் ஒன்றே என்ற நம்பிக்கை தளர்ந்து அது இரண்டாகி, இப்பொழுது மூன்றாக...

பாஸ்கரன் சொன்னான்.. "எங்களுக்கும் இரண்டு பிள்ளையள் இருக்குது உமை. அதுவும் பெண்பிள்ளையள்."

"அதுக்கு இப்ப இருந்துஏன் திட்டம் போடுறியள்? அதுகளின்ரை காலத்திலை நீங்கள் சொன்ன சமுதாய மாற்றம் ஏற்படாமலே போகப் போகுது?"

★

அடுத்த நாள் பிற்பகலில் பாஸ்கரனோடு றஞ்சனி அவர்கள் வீட்டிற்கு வந்தாள் கடந்த இரவு பாஸ்கரனின் முகத்திலிருந்த நிம்மதியோ நிறைவோ அப்பொழுது இல்லை என்பதை உமையாள் ஊகித்து அதிர்ச்சியடைந்தாள். அவள் கேள்விக்குறியை முகத்திலே படரவிட்டுறஞ்சனியைமௌனமாக நோக்கினாள்.

"அண்ணி, சமுதாயம் மாறும் என்று காத்திருப்பது கொக்கின் தலையின வெண்ணெயை வைத்து அது உருகும் வரை பொறுத்திருப்பதாய்ப் போயிடும். சும்மாயிருக்காமல் பெண்களாகிய நாங்கள் மற்றத்துக்குப் போராடி மாற்றத்தைக் கொண்டு வந்தே தீருவம் அதுவரையிலை என்னைத் தொந்தரவு செய்யாதையுங்கோ தயவுசெய்து இனி என்ர கலியாணம் பற்றி ஒண்டும் பேச வேண்டாம்."

இவற்றை சொல்லும்போது றஞ்சனியின் முகத்தில் படபடப்போ ஆத்திரமோ துளி கூட இல்லை ஆனால் அசைக்க முடியாத உறுதியின் தாங்கியாக அவளின் ஒவ்வொரு சொல்லும் அமைந்திருந்ததை உமையாளால்உணரமுடிந்தது

அடுத்த கணம் றஞ்சனி ஒன்றும் நடவாதது போலக் கலகலவென்று சிரித்தபடி, "எங்கை றாபியும் சுதாவும்? நித்திரையோ? என்று கேட்டபடி வீட்டினுள்ளே போனாள்.

பாஸ்கரனும் உமையாளும் திகைப்போடு ஒருவரை ஒருவர்பார்த்துக்கொண்டார்கள்.

தாழ்வாரத்தின் முன்னால் நின்ற முள்முருக்கை- கன்னிக்காலை-நோக்கி உமையாளின் கவனம் திரும்பியது

"முள்முருக்குகள் இந்தமண்ணிலே நூற்றுக்கணக்கில் இருக்கலாம் ஆனால் அவையெல்லாம் கன்னிக்கால் களாவதில்லை"என்றசிந்தனைஎழுவதை அவளால் தவிர்த்தல் கூட வில்லை.

## புல்லனே புரிந்துகொள்!

மணலாற்றில் எதிரிக்கு
மரண அடி
இது
புலிகளின் வீர
வரலாற்றில் மேலும்
ஒரு படி!
மண்கிண்டி முகாம்
மண்கும்பி ஆனது
சிங்கள வல்லாதிக்கமே
நன்றாகப்பாடம் படி!
அட!!!
உன் முதுகு முறிவுக்கு
ஒத்தடம் போடவா வா
சுப்பர் சொனிக்கால்
இந்த
சூரத்தனம்
பண்ணினாய்?
உனது ஆற்றாமையின்
அடையாளம அல்லவா
இது
பள்ளிக்குப் போன-இளங்
கன்றுகள் மீதல்லவா
குண்டுகள் போட்டாய்!
துண்டுகளாய் அவருடல்
சிதறுண்டு போனதைக்
கண்டு கொதிக்கும்
அவர்களைச் சுமந்த
வயிறுகள்!
கண்ணீர் உதிர்க்கும்
காணும் விழிகள்!
ஆனால்
அச்சத்தால் மனங்கள்
அள்ளுண்டு போகாது
அறிந்து கொள்!
நிச்சயம் உந்தன்
உச்சியைப் பிளக்கும்
உறுதியால் இறுகும்!
புலர்வினை வரிககப்
புலியென நகரும்
புரிந்து கொள் புல்லனே!
எங்கள் பிள்ளைகளின்
குருதியிற் குளித்த
புற்கள் கூட
உன்னைக்
கொல்லும் அம்புகளாய்
கூர்மை கொண்டெழும்.

நிலா தமிழின் தாசன்

# முடிமன்னனாக தனக்குத்தானே முடிசூடிக் கொண்ட ஜே. ஆர்.

**இனப்பிரச்சினையின் தார்ப்பரியத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆரம்பத்தில் விளங்கிக் கொள்ளவில்லை**

அதிகாரம் என்பது வெறுமனே போதையூட்டும் மதுசாரம் அன்று. அது ஒரு புத்தூக்கியும் கூட. சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குத் தாமே ஓய்வூதியத் திட்டம். தாராளமான சம்பளம் மற்றும் நன்மைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பாராளுமன்ற வாழ்க்கை பொருளாதார வகையில் பலன்தருவது. இது இவ்வாறிருப்பதால், சிறிலங்கா அரசியல்வாதிகள் அரசியலை விட்டு விலகிச் செல்வதில்லை. இதேவழியை ஜே. ஆர் ஜெயவர்த்தன வும் பின்பற்றினார்.

சிறிலங்காவில் அரசியல் கட்சிகள் குடும்பச் சொத்துரிமை என்பது இன்னொரு முக்கியமான விடயம். டி. எஸ். சேனநாயக்காவின் யு. என். பியை அவரது மகன் டட்லி சேனநாயக்கா பிதுரார்ஜிதமாகப் பெற்றார். பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியை உரிமை முறையாக அவரது விதவை சிறிமாவோவும், பிலிப் குணவர்த்தனாவின் மகாஜன எக்ஸத் பெரமுனையை (எம். ஈ. பி.) மகன் தினேஷ் குணவர்த்தனாவும் அப்படியே சுவீகாரம் செய்துள்ளனர். தேர்தலின்போது வேட்பாளர்கள் கட்சிக் கிளைகளினால் நியமிக்கப்படுவதற்குப் பதிலாகக் கட்சியின் உரிமையாளரால் நியமிக்கப்படுகிறார். இதனால் கட்சிக்குப் புத்துயிர் அளித்து கட்சியின் கொள்கையையும், அரசியலையும் புதுப்பிக்கக் கூடிய புதிய இரத்தம் கட்சித் தலைமையில் இல்லை.

சிறிலங்காவுக்கே உரிய அபூர்வமான தன்மைகளுக்கேற்ப ஐக்கிய முன்னணி அரசை அந்நேரத்தில் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கக் கூடிய மனோநிலையில் வாக்காளர் இருந்தார்கள். அதேவேளையில், கட்சியில் பழையவரான ஜே. ஆர். சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மாறான பலம் பொருந்திய எதிர்ப்பியக்கத்தை முன்னெடுத்துச் செல்லத் தயார் நிலையில் இருந்ததோடு, ஜனநாயக ஆட்சியைப் புனரமைக்கக் குரல் கொடுத்த சக்திகளுக்குத் தலைமை தாங்கவும முன்வந்தார்.

ஜே. ஆர். சரியான முறையில் பேரொலி எழுப்பியதோடு, வாக்காளரைப் பாதித்த ஐக்கிய முன்னணி அரசின் அனைத்துச் செயற்பாடுகளையும் நிராகரித்தார். வாக்காளர் எதை விரும்பினார்களோ அந்தத் தோரணையில் உறுதிமொழிகளையும் அளித்தார். பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரத்தை மீளவும் நிலைநாட்டல், சிறு காரியத்துக்கும் அவசர காலச் சட்டத்தை அரசு பிரகடனப் படுத்தலை நிறுத்துதல், வர்த்தக நிலையங்களை அரசு சுவீகரிக்கும் சட்டத்தில் திருத்தம், அமைச்சரவைச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கான தடையை நீக்குதல், ஊழலை ஒழித்தல், 'குடும்ப அதிகாரத்தை' இல்லாததாக்குதல் போன்ற வாக்குறுதிகளை ஜே ஆர். தந்தார். தனது அரசில் பழிவாங்கல் நடவடிக்கைக்கு இடமிருக்காது என்று கூறிய ஜே. ஆர். சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி முடிவாக இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வை எட்டப்போவதாகவும் சொன்னார்.

''நேர்மையும், சுதந்திரமானதும்'' ஆன சமூகத்தை அமைக்கப் போவதாக வாக்குறுதியளித்த யு. என். பி. 1977 ஜூலை22 தேர்தலில் அமோக வெற்றியை ஈட்டியது. 168 பாராளுமன்ற ஆசனங்களில் 140 ஆசனங்களைத் தட்டிக் கொண்டது. சகுனம் மிகச் சாதகமாக இருந்ததோடு, மக்களின் நம்பிக்கையும் உச்ச நிலையில் இருந்தது. இத்தேர்தல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி ஆட்சியில் மந்தநிலையில் இருந்த பொருளாதாரத்துக்கு ஒரு முடிவை ஏற்படுத்தியது.

## ஜே. ஆர். மகத்துவத்தின் மருட்சி

'எமக்கு இப்போது பாப்பரசர் பதவி கிடைத்தாகி விட்டது. இனி நாம் அப்பதவியை அனுபவிக்கலாம்.'' அலெக்ஸ்சான்டர் போர்ஜியா பாப்பரசராகத் தெரிவானதும் இவ்வாறு கூறினார். ஜே. ஆர். ஜெயவர்த்தனா35 வருடகாலம்துரிதமாகஇயங்கியபின்பிரதமரான போது ''நான் வழுக்கு மரத்தில் ஏறிவிட்டேன்'' என்றார். (இது டிஸ்ரேலி இங்கிலாந்தின் பிரதமரானபோது கூறியதை எதிரொலிக்கின்றது). ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மனோரதம் கட்டுக்கடங்காதது. பகட்டோடு கூடிய மாயை அவரை ஆட்கொண்டது. பதவியேற்றுச் சில வாரங்கள் தள்ளி. அவரது 71ஆவது பிறந்ததினத்தில் சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கினார் இப்படிச் செய்வது ஆட்சிப் பொறுப்பிலுள்ள மன்னருக்குரிய அதிகாரம் சார்ந்ததாகும். தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்டுச் சொற்பகாலம் பதவியிலிருக்கும் அரசியல் வாதி ஒருவருக்கு இம்மாதிரியான அதிகாரங்கள் இருப்பது வழக்கில்லை.

பிரதமர் பதவியிலிருக்கும் ஒருவரை(ஜே ஆர்) ஜனாதிபதியாகவும். அரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராகவும் மாற்றும் வகையில் அரசியல் யாப்பில் திருத்தம் செய்யப்பட்டது. பாராளுமன்ற நியதிச்சட்டத்தில் பிரதம மந்திரி என்ற சொற்பிரயோகம் வரும்இடங்களிலெல்லாம் ஜனாதிபதி என்று வாசிக்கப்படவேண்டும் என்று சட்டம் செய்யப்பட்டது. பிரதமமந்திரியாக இருந்தபடியே ஜனாதிபதி பதவியைத் தாவிப்பிடிக்கும் முயற்சி இது. நிறைவேற்று ஜனாதிபதி அமைச்சர் பதவிகளை வகிக்கவும். அதேவேளை, சாதாரணமாக ஒரு அமைச்சரைப்போல் திணைக்களங்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது. ஜெயவர்த்தனாவின் தனிப்பட்டவினோதமான விருப்பங்களுக்கும் வேடிக்கை கொண்டதான அபிலாசைகளுக்கும் ஏற்ற வகையில் நிறைவேற்று ஜனாதிபதி பதவி வடிவமைக்கப்பட்டது.

புராதன சிங்கள மன்னர்களின் வழக்கம் ஒன்றை ஜனாதிபதி மீளவும் சீரமைத்து, அவர்களைப் போல் தானும் வேளாண்மைச் சடங்கொன்றில் (Vap Magula) கலந்து கொண்டார். இது பிற்பாடு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாழ்க்கையில் ஓர் நிரந்தர அம்சமாகஇடம்பெற்றது.

ஜனாதிபதி மாளிகைக் காவலாளிகளுக்கு கறுப்பு மற்றும் சிவப்பு நிறத்திலான சிறப்புடைய சீருடைகள் அமைக்கப்பட்டன இது குடியரசுக்கு முந்திய கால மிச்சசொச்சமாகும் பித்தளையில் ER. என்ற எழுத்துக்கள் Rlizabeth Regina. பொறிக்கப்பட்ட சின்னத்தைக் காவலாளிகள் தரித்திருந்தனர். சண் செய்தித்தாள் அதன் புகைப்படத்தை வெளியிட்டு மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இது சம்பந்தமான ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் குறிப்பொன்றை டெய்லிநியூஸ் வெளியிட்டது ''இந்த எழுத்துக்கள் உண்மையில் யுனிஸ் றெக்ஸ் (Junius Rex) என்பதினைக்குறிக்க J R என்று இருந்திருக்க வேண்டும்.'' உண்மையில் ஜே. ஆர். தமாஷ் செய்யவில்லை.

ஜே ஆர் ஜெயவர்தனாவின் தலை பொறிக்கப்பட்ட ஒரு ரூபா நாணயம் செய்யப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டது. தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல் வாதி பதவியிலிருக்கும் காலத்தில் செய்யும் அவசரக் கோலம் இது. அநுராதபுரம் விளையாட்டரங்கில் நடைபெற்ற இராணுவக் கேளிக்கை ஒன்றில் ஜே. ஆர். இவ்வாறு கூறினார்; ''நான் ஒரு அரசன்தான். அரசனுக்குரிய அதிகாரங்கள் அனைத்தும் எனக்குண்டு. இந்த அதிகாரங்களை நான் நடைமுறைப்படுத்தப் போவதில்லை.'' (அரசுக்குச் சொந்தமான பத்திரிகையான டெய்லி மிறர் — ஒக்ரோபர் 16 1978) இதே பத்திரிகை ஒக்ரோபர் 17 இல் ஒரு திருத்தத்தையும் பிரசுரித்தது: 'பாராளுமன்றம் எனக்கு அரசனுக்குரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது ஆனால் நான் அரசன் அல்லன்'' அரச அதிகாரங்கள் அவர் கற்பனையில் தான் இருந்தன.

பல வருடங்களுக்குப் பிறகு ஒக்ரோபர் 1985 இல் நடந்த பொதுநலவாய நாடுகள் உச்சி மகாநாட்டில் ஜே ஆர். உரை நிகழ்த்தியபோது அதே பல்லவியைத்தான் படித்தார்.

''பதியப்பட்டுள்ள எமது வரலாறு மிகவும் பழமையானது கி மு 543 இல் விஜெயன் வட இந்தியவிலிருந்து வருகை தந்ததிலிருந்து பின்நோக்கிப் பல இனங்களையும் சேர்ந்த பல அரசர்களும் அரசிகளும்-சிங்களவர், இந்தியர், சோழர், தெலுங்கர் ஆங்கிலேயர் - ஹனோவர் மற்றும் வின்சர் வமிசத்தினர், இரு ஜனாதிபதிகள் இந்தநாட்டை ஆட்சி செய்து வந்துள்ளனர். 1972 இல் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் நான் தான். 1977-ம், 1982-ம் அவர் தேர்தலின் மூலம் ஜனாபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். இடைவிடாத வரிசைக்கிரமமான ஆட்சியாளர் நிரலில் மிகப் பழையதும், அனாதியானதுமான 193-வது பதவி இது.''

பிரமித்திருந்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் முன்நிலையில் அவர்இதனைத் தெரிவித்தார்.

ஜே. ஆர். பிழையாகக் கணக்குப் போட்டுள்ளார். ஆங்கிலேயர் இலங்கையைச் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்கு முதல், அரச பரம்பரையில் 191 - வது அரசின் ஆட்சியில் இருந்தான். 'இடையறாத வரிசைக் கிரமமான ஆட்சியில்' ஜே ஆர். தன்னை 193 - வது ஆட்சியாளராகப் பிரகடனப் படுத்த முடியாது. ஹனோவர் வின்ஸர் வமிசங்களைத் தவிர்த்துப் பார்த்தால்தான் (இரு வமிசங்களிலும் 1815 முதல் 1972 வரை ஒன்பது பேர் ஆட்சி செய்துள்ளனர்) ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் கணக்குச் சரியாகும். இந்த விஷயத்தில் ஜே ஆர் முடியில்லாத அக்கறை கொண்டிருந்த போதிலும், பயனற்ற இந்த வயோதிபரின் வெகுளித்தனமான வெளிப்பாடுகளினால் மகாநாட்டில் பங்கு பற்றிய கௌரவமான பார்வையாளருக்கு மனத்தாங்கலும், சங்கடமும் உண்டாகியிருக்கும்.

ஆகஸ்ட் 8, 1984ல் ஜனாதிபதி ஜெயவர்தனா கொழும்பில் கூடிய உலக சட்டமாஅறிஞர்கள் மாநாட்டில் பேசினார். தனது உரையில் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஏப்பிரகாம் லிங்கன் எழுதிய தனிப்பட்ட கடிதம் ஒனறை மேற்கோள் காட்டிப் பேசினார். அமெரிக்க அரசியல் யாப்பைப் பாதுகாப்பதென்று ஏப்பிரகாம்லிங்கன் செய்து கொண்ட சத்தியப்பிரமாணத்துக்கு அமைய தேசத்தைக் காக்க யாப்புக்கு முரணான காரியங்களைச் செய்ய வேண்டி இருந்ததாக அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐலன்ட் ஆகஸ்ட் 9, 1984)

ஏப்பிரகாம் லிங்கனின் இக் கடிதம் கணிசமான அழுத்தத்தை ஜே. ஆர் மீது உண்டு பண்ணியிருக்க வேண்டும். ஓரிரு வாரங்களுக்குப் பிறகு நீதிவான் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கக் கூட்டத்தில் உரையாற்றும் போது. ஏப்பிரகாம் லிங்கனின் கடிதத்தை மீளவும் மேற்கோள் காட்டி பின்வருமாறு கூறினார்: ''ஆயுதங்கள் மோதும் போது சட்டங்கள் மௌனமாகிய சந்தர்ப்பங்களும் உள்ளன'' என்றார். (Silent enim leges interarma)

2-வது உலகப் போரின் போது அற்கின் பிரபு பின்வருமாறு கூறினார்: ''இந்த நாட்டில் (இங்கிலாந்தில்) ஆயுதங்கள் மோதும் போது சட்டங்கள் மௌனமாக இருப்பதில்லை. சட்டங்கள் மாறலாம். யுத்தத்திலும், சமாதானத்திலும் சட்டங்கள் ஒரே மொழியைத்தான் பேசுகின்றன. சட்டம் எப்பொழுதும் சுதந்திரத்தின் ஒரு தூணாகும். இந்தச் சுதந்திரக் கோட்பாட்டுக்குத்தான் நாம் இப்போது போரிடுகிறோம். நீதிபதிகள் வெறுமனே மனிதர்களுக்கு மதிப்பளிக்காமல், மனிதனின் சுதந்திரத்தில் அதிகாரம் தலையிடும்போது. நீதிமன்றம் மனிதனுக்கும் அதிகாரத்துக்கும் இடையில் நின்று கொள்கிறது.''

டிசம்பர் 1985 இல் ஜே. ஆர். றோயல் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் பேசினார்: ''நான் கூறுவது என்னவென்றால் நல்லதோ கெட்டதோ நான் சொல்வதைச் சொல்லிலும் செயலிலும் பின்பற்றுங்கள். உங்கள் முடிவு எப்படியிருக்குமோ தெரியாது. ஆனால் உச்ச அந்தஸ்துக்குத் தூரமாக நீங்கள் இருக்கமாட்டீர்கள், (டெய்லி நியுஸ், டிசம்பர் 4, 1985)

1986 பெப்ரவரியில் தனக்கு மிகவும் நெருக்கமான விஷயத்தை மீண்டும் அசை போடுகிறார்.

அவரது செயலாளர் ஒருவரின்பிரிவுபசார வைபவத்தில், தனது வழக்கறிஞர் வாழ்க்கையோடு ஒட்டிய பழைய சம்பவங்களை நினைவுபடுத்துகிறார். ''எச். வி. பெரேரா, எல். ஏ. ராஜபக்ஷ, ஈ பி.விக்கிரமநாயக்கா ஆகியோர் நீதிமன்றத்தில் வழக்குரைத்தார்கள். அவர்கள் எல்லோரும் அரச வழக்கறிஞர்கள் (King's Counsel); என்னைத் தவிர ஆனால் நான் இன்று அரச வழக்கறிஞர்களை உருவாக்க வல்ல ஜனாதிபதியாக உள்ளேன். (டெய்லி நியூஸ். பெப்ரவரி 26, 1986) ஜனாதிபதியால் அரச வழக்கறிஞர்களை உருவாக்க முடியாது. ஜனாதிபதி வழக்கறிஞர்களை ஏற்படுத்தலாம். (''பொலியஸ்டர் துணி; பட்டல்ல'' என்கிறார் பழையவரான ஒரு இராணி வழக்கறிஞர்)

கீர்த்திசேனா என்ற திருத்துநர். காலி உயர் நீதி மன்றத்தினால் கொலைக் குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளி மேன்முறையீடு செய்ததன் பேரில் மரணதண்டனை 8 வருடச் சிறைத்தண்டனையாகக் குறைக்கப்பட்டது. குற்றவாளியின் தந்தை, தான் வயோதிபர் என்றும், தன்னைக் கவனிக்கத் தன் மகன் தேவை என்றும், மகனுக்கு மன்னிப்பு வழங்கக் கோரி ஜனாதிபதிக்கு மனுச் செய்தார். வழமைப் பிரகாரம் ஜனாதிபதி அந்த மன்றாட்ட மனுவை நீதி அமைச்சரின் அறிக்கைக்குச் சமர்ப்பித்தார். கைதிக்கு கணிசமான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவருக்கு மேலதிக சலுகை அவசியமில்லை என்று பரிந்துரைக்கப்பட்டது. இவ்வகையான பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படுவது வழக்கம். ஜனாதிபதி கைதியை உடனடியாக விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார். மன்றாட்ட மனுவில், கைதியின் தந்தை, ஜனாதிபதியை, ''பூமியில் எமது கண்ணுக்குப் புலப்படும் ஒரேயொரு கடவுள்'' என்று வர்ணித்துள்ளார். (சண்டே ஒப்சேபர் 12, ஏப்ரல் 1987)

பியகமஏற்றுமதி வலயத்தில் மே 31, 1987 இல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசும்போது, ''2500 ஆண்டுகளாக நாம் உலகில் உள்ள பெரிய நாடுகளுடன் தாக்குப் பிடித்துள்ளோம். 1815இல் எமது இராஜ்யத்தைக் கொடுத்து சிறிலங்கா அரசருக்குப் பதிலாகப் பெரிய பிரித்தானியாவின் அரசரைப் பெற்றுக் கொண்டோம். அந்த முடியாட்சியின் வாரிசு நான்.''

(8ஆம் பக்கம் பார்க்க)

லங்கா காடியன் மே மாத இதழ்களில் ஆடன் என்பவர் எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகள்.

**தொகுப்பு: மதன்**

# கட்சி தாவல் தடைச்சட்ட நீக்கம்; ஐ. தே. கட்சி பின்வாங்குவது ஏன்?

ஸ்ரீலங்காவின் அரசியல் கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் பாதிப்புக்களை நேரிடையாக அறிந்து கொண்டவர்களில் டாக்டர் நெவில் பெர்னாண்டோவிற்கு முதலிடம் உண்டு எனலாம். பாணந்துறை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக 1977 பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1981இல் கட்சித் தலைமையோடு முரண்பட்ட நிலையில் தூக்கி எறியப்பட்ட போது பதவியையும் பறிகொடுக்க நேர்ந்தது. சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட இவர் 1989இல் மீண்டும் பாராளுமன்றம் புகுந்தார். கட்சிக்குள் இருக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அணியான 'ஹெல உறுமய' குழுவுடனும், அனுரா பண்டாரநாயக்கா அணியுடனும் தம்மை இனங்காட்டிக்கொண்டார். இந்த நிலையில் சுதந்திரக் கட்சியிலிருந்தும் வெளியேற்றப்படக் கூடும் என்று எதிர்பார்ப்பு ஒருபுறமும், ஐ. தே. கவின் பச்சை விளக்குக் காட்டும் போக்கு மறுபுறமும் நீடிக்க கட்சித் தாவல் தடுப்பு சட்டத்தை நீக்கக் கோரும் பிரேரணையொன்றை டாக்டர் நெவில் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கும், பொதுவான உலக வழக்கத்திற்கும் புறம்பாக எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தவரும் இவர்தான் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதே.

இன்றைய அரசியலமைப்பிற்குப் பதினேழாவது திருத்தமாக முன்மொழியப்பட்டிருக்கும் இப்பிரேரணை கொழும்பு அரசியற் களத்தில் பலத்த சர்ச்சைகளையும், விவாதங்களையும் தோற்றுவித்திருப்பது உண்மைதான். குழந்தையை குளிப்பாட்டிய நீருடனேயே தூக்கி வீசுவது போல இன்றைய அரசியலமைப்பை அப்படியே தூக்கி வீச வேண்டும் என்று கருதுவோர் ஒருபுறமும் ஒரு சில திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்தால் போதுமானது என்று எண்ணுவோர் மறுபுறமும், இதனை இப்படியே பேண வேண்டும் என்ற கருத்துடையவர்கள் இன்னுமொரு புறமுமாக இருக்கும் கொழும்புச் சூழ்நிலையில் நெவில் பெர்னாண்டோவின் பிரேரணை முன்மொழியப்பட்டிருக்கிறது.

## திரிசங்கு சொர்க்க நிலையில் நெவில் பெர்னாண்டோ

சுதந்திரக் கட்சியின் உட்பூசல்களின் விளைவாய் கட்சி மாறக் கூடியவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் இந்தப் பிரேரணை ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படலாம் என்றே கருதப்பட்டது. ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரினதும் ஆதரவு சமக்கு இருப்பதாகக் குறிப்பிட்ட நெவில் பெர்னாண்டோ ஜனாதிபதி விஜயதுங்காவை வானளாவப் புகழ்ந்து கருத்து வெளியிட்ட போது இந்த ஊகம் மேலும் வலுப்பெற்றது. ஆனால் சில தினங்கள் மட்டுமே நீடித்த இந்த ஊகம் கடந்தவாரத்தில் ஐ. தே. க. செயற்குழு வெளியிட்ட அறிவிப்பின் மூலம் தலைகீழாகப் போயுள்ளது.

ஐ. தே. கவின் இந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணமாக இருக்கக் கூடும்? கடந்த வாரத்தில் சிறிமாவோவை சந்தித்த நெவில் பெர்னாண்டோதான் ஐ. தே. கவுடன் மீண்டும் இணையப் போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்திருந்தாராயினும் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேல் நீடித்த இந்தப் பேச்சுக்களின் போது இப்பிரேரணையை மீளப்பெறுவதற்கு கூட ஒரு கட்டத்தில் தயாராக இருந்தார் என்று கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர் இந்த நிலையில் நெவில் பெர்னாண்டோவை நம்பி, இந்த திருத்தத்திற்கு ஆதரவளிப்பது என்று தீர்மானிப்பது ஐ. தே. கவிற்கு சங்கடத்தை உருவாக்கியிருக்கலாம் என்பது ஒரு விடயம். இந்தத் திருத்தத்திற்கு ஆதரவளித்தால் சுதந்திரக் கட்சிக்குள் இருந்து வரும் உட்பூசல் ஒரு வகையில் முற்றுப் பெற்றுவிடலாம் என்றும் கருதப்படுகிறது. அதாவது கட்சியின்போக்கில் அதிருப்தியுற்றோர் வெளியேற்றப்பட அல்லது தாமாகவே வெளியேறிவிட சுதந்திரக் கட்சி உட்பூசல்களை தீர்த்து புதுவடிவம் பெற்றுவிடலாம் என்றும் அஞ்சப்பட்டது மற்றுமொரு விடயம்.

இன்னும பிரேமதாசா மீதான குற்ற விசாரணை கோரும் பிரேரணையின் மீது கையெழுத்திட்ட ஐ. தே: க. உறுப்பினர்கள் யார் யார் என்பதே இன்னமும் இனங்காணப்படாத நிலையில், ஐ. தே கவினுள் இருக்கும் 'கறுப்பு ஆடுகள்' இந்தத் திருத்தத்தை பயன்படுத்த முற்படலாம் என்ற எண்ணம் ஐ. தே.கவை கிலிகொள்ள வைத்துள்ளது. அத்துடன் சிறிசேன குரே போன்ற முக்கியஸ்தர்களின் போக்கும் பிரேமதாசா விசுவாசிகளின் எதிர்கால அரசியல் இலக்குகள் குறித்தும் திட்டவட்டமாக எதுவும் தெளிவுபடுத்தப்படாத நிலையில் இந்தத் திருத்தத்திற்கு ஆதரவளிக்க முற்படுவது ஐ. தே. கவையே குழிக்குள் தள்ளி விடக்கூடும்.

எனவேதான் அரசியலமைப்புக்கு திருத்தம் கொண்டு வரும்போது அமைச்சரவை அவற்றை அங்கீகரிப்பது அவசியம் என்றும், டாக்டர் நெவில் பெர்னாண்டோவின் பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவோ, அங்கீகாரம் பெறப்படவோ இல்லை என்று கூறி, ஐ. தே. க. ஆதரிப்பதிலிருந்து பின்வாங்கியுள்ளது. கட்சி மாறலை அனுமதிக்கும் வகையில் அரசியல் அமைப்பின் 99 (13) ஆவது பிரிவை திருத்தக்கோரும் பிரேரணை எதிர்வரும் செவ்வாயன்று பாராளுமன்றத்திற்கு வரும்போது எதகைய பிரதிபலிப்பை ஏற்படுத்தும் என்பது இப்போது கேள்விக் குறியே.


திடீரென ரசம் அருந்த வேண்டும் அல்லது
உணவுடன் கலந்து உண்ணவேண்டும் எனத் தோன்றுகின்றதா?
அரைக்கத் தேவையில்லை, கொதிக்கத் தேவையில்லை.
இதோ
"ஒரு நிமிடத்தில் சுவைமிகு ரசம்"
தயார்
ஆச்சரியமாக உள்ளதா?
ஆம்.
TASTY யின் புதிய அறிமுகம்
'திடீர் ரசம்'
(INSTANT RASAM)
[இரசாயன சேர்க்கைகள் அற்றது]
1 தேக்கரண்டி திடீர் ரசக்கிறீமை 1 டம்ளர் சுடு நீரில் கலக்கும்போது சுவையான ரசம் உங்களுக்குக் கிடைக்கும்.
100 கிராம் பொதியின் விலை ரூ. 17/50 மட்டுமே.
இன்றே உங்கள் வியாபாரியிடம் கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.
TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.
(சி-7093)



வெலிங்டன் சந்தியில்




UNIKCO
COMPUTER CENTRE
- BASIC (Files. Graphics and Sound)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

புதிய பிரிவுகள்:
01.08.93 (சனி, ஞாயிறு)
02.08.93 (வார நாள் வகுப்புகள்) ஆரம்பமாகின்றன.
மேலதிக விபரங்கட்கு :
37, CLOCK TOWER ROAD, JAFFNA.
(சி-7095)



அபிராமி மில்
உங்களுக்குத் தேவையான
தானிய வகைகளை
உங்கள் விருப்பத்திற்கேற்ப
உடைத்து, தீட்டி,
அரைத்துக்கொள்ளலாம்.
அபிஷேக திரவியங்களையும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஐயனார் கோவில் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/7089)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் தாஸ்**
(தேவலிங்கம் அன்ரனிதாசன்)
மயிலிட்டி

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 14-07-1970 | 30-07-1991 |

மயிலைமண் பெற்றெடுத்த தாசனே
தமிழ் ஈழ வீரனே தன்மானப் போரிலே
உன் தலைவனின் பாதையில் நடந்து
உன் உயிரை ஈந்தாயே.

இவருடன் மற்றும் மறைந்த மாவீரர்கட்கும்
எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

(5563) - குடும்பத்தினர்

# நித்திய கண்டம் பூரண ஆயுசாய் நிலை பெறும் நரசிம்மராவ் அரசு

இந்தியப் பாராளுமன்ற வரலாற்றிலேயே மிகுந்த பரபரப்புடன் காணப்பட்ட நாட்களில் கடந்த புதன்கிழமையும் ஒன்றாகும். ஜூன் 1991இல் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி பதவியேற்ற பின் தனது இருபத்தைந்து மாத ஆட்சிக் காலத்தில் சந்தித்த மூன்றாவது நம்பிக்கை இல்லாப் பிரேரணை அன்று தான் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பத்திரிகையாளர்கள் மாடம், பார்வையாளர்கள் மாடம், அதிகாரிகள் மாடம் என அனைத்துப் பகுதிகளும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஒவ்வொரு கட்சியும் தமது உறுப்பினர்கள் அனைவரதும் வருகையை உறுதிப்படுத்த பிரமப் பிரயத்தனம் செய்து கொண்டன. உடல் நலம் குன்றியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட சக்கர நாற்காலிகளில் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். இது தவிர காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் மாநிலங்களான மகாராஷ்டிரா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் போன்ற பல மாநிலங்களிலிருந்தும் முதலமைச்சர்கள் டில்லிக்கு விரைய 'அரசியல்' செயற்பாடுகள் சுறுசுறுப்புக்கு உள்ளாகியது. வாக்கெடுப்பில் நரசிம்மராவ் அரசு தப்பிப் பிழைக்குமா என்பது இறுதி நேரம் வரையிலும் சஸ்பென்சாகவே இருந்தது.

## மூன்றாவது முயற்சி

மே 1991இல் நடந்த பொதுத்தேர்தலையடுத்து நரசிமமராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி ஈட்டாத நிலையில் கூட்டணிக் கட்சிகளை நம்பிய சிறுபான்மை அரசாக பதவியேற்றுக் கொண்டது. அப்போது கொண்டு வரப்பட்ட நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பில் நரசிம்மராவ் அரசு 130 வாக்கு வித்தியாசத்தில்வெற்றி பெற்றது. அப்போது மதவாத சக்திகளுக்கு எதிராக தேசிய முன்னணியும், இடதுசாரிகளும், அ. இ. அ. தி. மு. கவும் நரசிம்மராவ் அரசுக்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன ஆனால் இந்த அமோக ஆதரவு நிலை. ஒரு ஆண்டுகளுக்கு மேல் தாக்குப் பிடிக்கவில்லை. 1992 ஜூலையில் முதன்முறையாக நரசிம்மராவ் அரசு நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று சிறிய கட்சிகளின் ஆதரவுடனும், அ. இ. அ. தி மு. க போன்ற தோழமைக் கட்சிகளின் ஆதரவுடனும் காங்கிரஸ் அரசு 46 வாககு வித்தியாசத்தில் காங்கிரஸ் பதவிப் பொறுப்பை தக்க வைத்துக் கொண்டது.

அடுத்து கடந்த டிசம்பரில் அயோத்தியாவில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டு நாடு முழுவதும் வகுப்பு மோதல்கள் வெடிக்கலாம் என்றிருந்த சூழ்நிலையில் பாரதீய ஜனதாக கட்சித் தலைவர்கள் அரசினால் சிறை வைக்கப்பட்டிருந்த வேளையில் அக் கட்சியினால் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக இரண்டாவது முறையாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது, ஆனால் தேசிய முன்னணியும், இடதுசாரிகளும் ஏனைய சிறு கட்சிகளும் அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்க 225 வாக்குகள் வித்தியாசத்தில் நரசிம்மராவ் அரசு அமோக வெற்றியீட்டியது. ஆனால் ஆறு மாதங்கள் மட்டுமே கழிந்துபோன இன்றைய நிலையில் சூழ்நிலைகள் மிகவும் வித்தியாசமாக இருந்தன. பிரதமர் நரசிம்மராவ் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் முன்பு அரசு மண்டியிடுவதாக இடதுசாரிகளின் புகார்கள் மலையளவுக்குஉயர்ந்திருந்தது. வி. பி. சிங் தலைமையிலான ஜனதாதள் கட்சியிலிருந்துவெளியேறிய அஜித்சிங் குழுவினர் கூட நரசிம்மராவ் 'அக்கினிப் பிரவேசம்' செய்ய வேண்டுமென்ற விருப்பத்தை பகிரங்கமாக வெளியிட்டிருந்தது. காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி உறவு முறிந்தது என்று அறிவித்த தோழமைக் கட்சி

இளையவன்

யான அ. இ. அ. தி. மு க. மோதல் போக்கில் தீவிரமாகி இருந்தது. சுருங்கக் கூறின் தீவிரமான இடதுசாரிகள் முதல் தீவிர வலதுசாரிகள் வரை காங்கிரஸ் அரசுக்கு எதிராக செயற்படுவதில் கைகோர்த்து இருந்தனர். காங்கிரசின் நண்பர்களாக இருந்த அஜித்சிங் குழுவும், அ. இ. அ. தி. மு. க வும் எதிரிகளாகி விட்ட சூழலில்தான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அஜோய் முக்கோபாத்யாய நம்பிக்கை இல்லாப் பிரேரணையை விவாதத்திற்குக் கொண்டு வந்தார். ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஏறத்தாழ சமபலத்தைக் கொண்டிருந்த நிலையில் வெற்றி வாய்ப்பு இறுதிநேரம் வரை ஊசலாடியபடியே இருந்தது.

## திரைமறைவு முயற்சிகள்....

நரசிம்மராவ் அரசு நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இருந்து தப்பிப்பிழைப்பதற்கு வி.பி சிங்கின் தலைமையிலான ஜனதா தள்ளிலிருந்து பிரிந்து சென்ற அஜித் சிங் தலைமையிலான குழுவினரில் ஏழுபேரும் பீகார் மாநிலத்தின் ஜார்க்கன்ட் முக்தி மோர்சாவின்சோரன் பிரிவிலிருந்து நான்கு பேரும் அரசை ஆதரிக்க முன்வந்ததே முக்கிய காரணம் ஆகும். இந்தப் பதினொருவாக்குகளையும் பெற்றுக்கொள்வதற்காக திரைமறைவில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன? அல்லது நிகழ்த்தப்பட்ட பேரங்கள் என்ன? என்பன பற்றிய விபரங்கள் இன்னமும் வெளிச்சத்திற்கு வரவில்லை எனினும்இபபேரம் பேசுதல்களின் பின்னணியில் அறிக்கைகள் விடுவதிலும் புரளிகள் பரப்புவதிலும் பெயர் பெற்ற ஜனதாக் கட்சித் தலைவர் டாகடர் சுப்பிரமணியம் சுவாமியின் கரங்கள் செயற்பட்டிருப்பதாக நம்பகரமாகக்கூறப்படுகின்றது. இந்திய அரசியலில் கட்சிகளுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்துவதிலும், கோஷ்டிகளை ஏற்படுத்துவதிலும் சுப்பிரமணியம் சுவாமி பெயர்போனவர்என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சமயவாதி ஜனதாக் கட்சியின் மூலாயம் சிங்யதவ் குழுவினரும், அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சியினரும், பகுஜன் சமாஜ் கட்சியினரும் வாககளிப்பில் கலந்து கொள்ளாதது அரசுக்கு சௌகரியத்தை ஏற்படுத்துவதற்கே ஆகும். ஆக இந்தியப் பாராளுமன்றத்தின் மக்களவையில்தறபொழுதுள்ள 532 உறுப்பினர்களில 248 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட காங்கிரஸ் கட்சி மீண்டும் மயிரிழையில் தன் உயிரைத் தக்கவைத்துக் கொள்ள டாக்டர் சுவாமியோடு டில்லியில் முகாமிட்ட காங்கிரஸ் கடசி ஆட்சி நடத்தும் மாநில முதல்வர்கள் பலரும் துணை செய்துள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 251 வாக்குகளும். எதிராக 265 வாக்குகளும், பதிவு செய்யப்பட நரசிம்மராவ் அரசு நிம்மதிப் பெருமூச்சைஇழுத்துவிட்டுக்கொண்டுள்ளது. ஆனால் இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் கூறியிருபபது போல இது வெறும் எண்கணித வெற்றி மட்டுமே யாகும். (This is aArithmetrcalwin for the Government)

## எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு

கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் எதிர்க்கட்சிகளிடம் காணப்படாத ஒற்றுமை இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின்போதும்வாக்களிப்பின் போதும் காணப்பட்டுள்ளது. ஒரு முக்கிய விடயம் ஆகும். மண்டல் கமிஷன் சிபார்சு முதல், அயோததியா விவகா

(8 பக்கம் பார்க்க)

# தலைக் காயங்கள் அபாயகரமானவை; உடலியக்கம் பாதிப்படையலாம்!

'தலையில் குட்டாதே' என்று பெரியவர்கள் கூறுவதை கேள்விப்பட்டிருக்கிறோம். அதில் மறைந்திருப்பது ஓர் அறிவியல் உண்மை என்பது நமக்குத் தெரியாது. தலையில் குட்டினால் விபரீத விளைவுகள் ஒருவேளை ஏற்படாமல் போகலாம். ஆனால் தலையில் பலத்த அடிபட்டால் எண்ணிப்பார்க்க இயலாத அபாய விளைவுகள் ஏறபடும். தலையில்தானே நம் உடலை ஆள்கின்ற இராஜாவாகிய மூளை என்ற முக்கிய அங்கம்உள்ளது! நம் இயக்கம், செயல் சிந்தனை நினைவாற்றல், இயல்பு போன்ற அனைத்திற்கும்ஆணிவேர் மூளையன்றோ? தலையில் அடிபட்டு மூளை பாதிக்கப்பட்டால் என்னவாகும்? சற்றே சிந்திப்போமா?

## முக்கிய அங்கம்

தலைபலமாகத் தாக்கப்படுவதால் மூளையின் கவசமாகிய மண்டைஓடு நொருங்கி சேதப்படுகின்றது. உடலின் எல்லா மூலை முடுக்குகளும் பல்லாயிரக் கணக்கான நரம்புகளால் மூளையுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒருபெரிய அலுவலகத்தில் பல பிரிவுகள் இருப்பதுபோல மூளையிலும் பல பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதியும் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து வருகின்றது. இயக்கங்களின் முக்கிய முடிச்சுக்கு ஆபத்தென்றால் உடலியக்கங்கள் ஸ்தம்பித்துவிடும்.

## விளைவுகள்

பொதுவாக, மூளையின் பாதிப்பு அதில் எப்பகுதி எவ்வளவிற்கு சேதப்படுகிறதோ அதைப் பொறுத்தே அமையும் அப்பகுதியால் கட்டுப்படுத்தப்படும் செயல்கள் ஓரளவிற்கோ அல்லது முழுமையாகவோ செயலிழக்கலாம்

## பாதிக்கப்பட்டோர்கீழ்க்கண்ட இடர்பாடுகளுக்குஆட்படலாம்

தலையில் அடிபடுதல் இயல்பான செயல்களை செய்ப இயலாமை, பேச்சுத் திறன் இழத்தல், பழைய நினைவுகளை இழத்தல், கைகால் செயலிழத்தல், விழிப்புணர்ச்

கோ. அமிர்தகனேசன்

யுடன் செயலாற்ற இயலாமை காரணமின்றி ஆத்திரப்படல், அழுதல், முரண்பாடாக செயல்படல்செயலற்றகோமாநிலை அடைதல்என்பனஏற்படலாம்.

ஒருவருக்கே இவ்வளவு பாதிப்புமா என்று அஞ்ச வேண்டாம் மூளையின சேதத்திற்கு ஏற்றவாறு பாதிப்பு ஏற்படும் கோமாநிலை பல நாட்களோ ஆண்டுகளோநீடிக்கலாம். இந்நிலையிலுள்ளோரை தனிக்கவனமளித்து சிகிச்சை செய்வது மிக அவசியம் அல்லாவிடில் பல நோய்கள் அண்டி விரைவில் இறக்க நேரிடும், கோமாவிலிருந்து தப்பித்த சிலர் மெதுவாக முன்னேறி தேர்ச்சி பெறவும் முடியும். மூளையில் உள் வீக்கம் ஏற்பட்டால் இரத்தக்குழாய்கள் விரிய முற்படும். ஆனால் அழுத்தமான மண்டை ஓடு இதற்கு தடையாக இருப்பதால் தேவைக்கு குறைவான இரத்தமேசெல்லும். மூளைக்கு செல்லும் ஒட்சிசன் இவ்வறு தடைப்படுவதால் அடிபட்டவர் பல உடல் சீர்கேட்டுக்கு ஆளாகிறார்.

துப்பாக்கித் தோட்டா, கல் போன்ற கடினபொருள்களால் தாக்கப்படும்போது தலையில் மண்டை ஓடு துளைபடுவதால் துளைகாயம் ஏற்படும் இதனால் மூளை அழற்சியுற்று அதன் மெல்லிய திசுக்களும் நரம்பு செல்களும் சேதமடையும்

தலை கடினமான பரப்பின் மீது வேகமாக மோதுவதால் உள் தலைக்காயங்கள் ஏற்படும். இதில் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகும் மூளை முறுக்குற்று பிதுங்கி செயலற்றுப் போகலாம்

தலை அடிபட்ட இடத்தில் ஊமைக்காயம் உண்டாகலாம் அடிபடும்போது இரத்தக் குழாய்கள் உடைபடுவதால் இரத்தக் கசிவு ஏற்படலாம். இதற்கு ஹேமடோமா (Hematoma) என்ற பெயர். இவை அடிபட்டவருக்கு குழப்பம், அமைதியின்மை பிதற்றல், தலைவலி, கோமா போன்றவை ஏற்படுத்தலாம். சிக்கல்களை சொல்வதோடு நின்று விடுவதில்லை. நம் அறிவியல் வளர்ச்சி. அவை தீர்க்கவும் பல உத்திகளைச் சொல்கின்றது,

## சிகிச்சை

அடிபட்டவருக்கு உடனடியாக முதலுதவி அளித்து அருகில் உள்ள உரிய மருத்துவமனையில் முதலில் சேர்க்க வேண்டும். காலம் தாழ்த்தக் கூடாது.

இன்று மருத்துவத்துறை வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ளதை நாம் அறிவோம். C T (Computer Tomography) ஸ்கேனிங் முறையில் அடிபட்டவரின் பாதிப்பைத் துலலியமாக அறிந்து சிகிச்சை அளிக்கமுடிகிறது. பொஸி–ரோன் எமிஷன் டோமோகிராஃபி (Positron Emission Tomography) N. M R ஸ்கேனிங் முறைகளால் மூளையின் செயல் திறனை அறியவும், செல்களில் ஏற்படும் மாற்றங்களைத் தெரிந்து கொள்ளவும் முடிவதால் மருத்துவருககுப் பேருதவியாக உள்ளது.

செரிபரல் ப்ளட் ஃப்ளோ சிஸ்டம் (Cerebral Blood Flow System) மூலம் மூளையில் இரத்த ஓட்டப் பாதையை படம் பிடிக்கமுடிவதால் தக்க வைத்தியம் அளிப்ப எளிதாகிறது.

டையூரிடிக்ஸ், ஸ்டீராய்ட்ஸ் மருந்துகள் மூளையிலிருந்து நீரை வெளியேற்றவும், பார்பிட்யுரேட் வகை மருந்துகள் மூளையில் நரம்புகளின் செயலைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகின்றன.

சிகிச்சைக்குப் பிறகும் சிலர் எதிலும் விருப்பமின்றி, மறதியுடையவராய், பழைய நினைவுகள் இல்லாதவராய் இருக்கலாம். இவர்களைக் குடும்பத்தினரும் மற்றவர்களும் வெறுத்து அலட்சியப்படுத்தாமல் பொறுப்புணர்ச்சியோடும், பொறுமையோடும் நீண்டகால பயிற்சி அளிக்க முற்படுவது மிகமிக அவசியம். போதிய தன்னம்பிக்கை கொடுத்து உளவியல் நிபுணர்களிடம் ஆலோசனை பெற்று வளமான வாழ்விற்கு வழி வகுக்க வேண்டும்.

தற்காப்புநடவடிக்கைகளை நாமே முன்னரே சிந்தித்து பின்பற்ற வேண்டும். விரைவு வாகனங்களில் செல்லும் போது தலைக்கவசம் அணிவது, சாலை விதிகளை அனுசரிப்பது. மது அருந்தி ஓட்டாதிருத்தல், குழந்தைகளை வாகன ஜன்னல் அருகிலோ பிடிப்பின்றியோ விடாதிருத்தல் போன்றவைகளை கடைப் பிடிக்க வேண்டும்.

# மனித வளர்ச்சியை பாதிக்கும் ஓசோன் மண்டல சிதைவு

## அமெரிக்கவிஞ்ஞானிகளின் ஆய்வுத்தகவல்

கடும் கோடை காலத்தில் பொதுமக்கள் வெளியே செல்லும்போது சூரிய வெப்பத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்க குடையை எடுத்துச் செல்வது வழக்கம். குடையின் துணி சூரிய கதிர்களைத் தெறிப்படையச் செய்கின்றது. குடையின் துணி மென்மையாக இருப்பின் அல்லது துவாரங்கள் காணப்படின் ஒளிக்கதிர்கள் அதனூடாக உட்சென்று குடையைப் பாவிப்பவரைத் தாக்கும்.

இதைப் போன்ற அமைப்பே சூரியனிலிருந்து வெகுதொலைவில் இருக்கும் பூமி கொண்டிருக்கிறது பூமியைச் சுற்றி வாயு மண்டலமும், அதன் மேல் வெற்றிடமும், இதன் மேல் ஒரு நீண்ட படலமும் காணப்படுகிறது. இப்படலம் ஓசோன் மண்டலம் எனப்படுகிறது இம்மண்டலம் பூமியைப் பாதுகாக்கும் ஒரு குடை போன்ற கவசத்தைக் கொண்டுள்ளது. வெப்பம் மிகுந்த சூரிய ஊதாக் கதிர்கள் இப்படலத்தில் பட்டு ஒளித்தெறிப்பின் மூலம் முறிவடைவதினால் வெப்பம் குறைவடைந்து பூமியை வந்தடைகிறது இதனால் பூமியில் வாழும் உயிரினங்கள் பயிர்கள் போன்றனவற்றிற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய வெப்பம் கிடைக்கின்றது. பூமியைக் காக்கும் இக்குடை அமைப்பைக் கொண்ட ஓசோன் படலம் இல்லையெனில் ஏனைய கிரகங்களில் உள்ளது போன்று கற்பாறைகளும், மண்தூசுகளும் மாத்திரமே பூமியில இருக்கும்.

இலங்கை பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்துள்ளதால் சூரியனின் தாக்கம்இங்கு மிகுதி.32 பாகை முதல் 42 பாகைவரை வெப்பநிலை இங்கு காணப்படுகிறது. இந்த ஓசோன் படலம் பற்றி அண்மையில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன இது சூரியனின் புற ஊதா கதிர் வீச்சிலிருந்து பூமியை பாதுகாக்கிறது. இந்த ஊதாக்கதிர்கள். நேரடியாக பூமியை வந்தடையுமானால் அது புவியில் உள்ள உயிரினங்களுக்குபெரும் கேடு விளைவிக்கும் ஓசோன் கவசத்தை ஊடறுத்து செல்லக்கூடிய பல இரசாயனங்கள் தற்போது காணப்படுவதால் காலக்கிரமத்தில் ஓசோன் படலம் செயலிழந்துபோகும்வாய்ப்புகள் உண்டு சூரியனின் புற ஊதாக்கதிர்கள் பூமியை நேரடியாக தாக்கும்போது சகல உயிரினங்களினதும் வளர்ச்சி குன்றும் பயிர்கள் நோய் எதிர்ப்புசக்தியை இழந்து வாடும். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தோல நோய்கள் ஏற்படும் கண் பார்வை குறைபடு. மனிதவளர்ச்சி குன்றல்,நோய் எதிர்ப்பு குன்றல, இயற்கை காலநிலை மாற்றம் மழைவீழ்ச்சி குன்றும். பூமியினதும் நீரினதும் வெப்பம் கூடும்.

இது சம்பந்தமாக அமெரிக்க விஞ்ஞானிகள் பல ஆய்வுகளை மேற்கொண்டு மனிதன் மிருகங்கள் வளர்ச்சிகுன்றஓசோன் படையில் உள்ள துவாரம் காரணமா என ஆராய்ந்தனர். ஒருசில விஞ்ஞானிகளின் கூற்றுப்படி 50 வருடங்களுக்கு முன் உள்ள மனித மிருக வளர்ச்சி 20ஆம் நூற்றாண்டில் 3-4 வீதம் குறைந்துள்ளதாக கணித்துள்ளனர்.

ஓசோன் படையில் சேதத்தை ஏற்படுத்துவது குளிரூட்டிகளுக்கு பாவிக்கப்படும் குளோரோ புளோரோ காபன் (Chloro Fluoro Carbon) (C.F.C) என்ற இரசயன பதார்த்தமாகும். 1986இல் வியன்னாவில் நடைபெற்ற சூழல் மாசுபடல் கூட்டத்தில் C.F.C இரசாயனத்தால் ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்படுகிறதுஎன்பது உலகிற்கு தெரிவிக்கப்பட்டது. 24 நாடுகள் இந்த இரசாயன பொருளின் உற்பத்தியை குறைப்பதற்கு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

மக்களின் விழிப் புணர்ச்சி காரணமாகவும், விஞ்ஞானிகளின் எச்சரிக்கை காரணமாகவும் 1978 முதல் 1988 வரை அதிகரித்து வந்த குளோரோ புளோரோ காபனின் உற்பத்தி 1990களில் பெருமளவு குறைந்தது. 1992இல் எடுத்த கணிப்பீட்டின்படி பூமியை சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் C.F.Cஇன் நச்சுத் தன்மை வளிமண்டலத்தில் 2 முதல் 3 வீதம் குறைந்துள்ளது அறியப்பட்டுள்ளது எனினும் கம்பியூட்டர்களின் கணிப்பில்1.5 வீதம் மாத்திரமே குறைந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

1993 இல் CFC உற்பத்தி வெகு குறைவாக இருப்பினும் முன்னைய ஆண்டுகளில் உற்பத்திசெய்யப்பட்டு கையிருப்பிலுள்ள இந்தஇரசாயனம் உலகில் இன்னும்பல ஆண்டுகள் பாவனையில் இருக்கப் போவதை மறுப்பதற்கில்லை.

மேலை நாடுகளுடன் இலங்கையை ஒப்பிடுகையில் குளிர்சாதன குளிரூட்டி பாவனை மிகக்குறைவாக காணப்பட்டாலும் பூமியின் வளிமண்டல CFC தாக்கத்தினால் பாதிப்படைந்துள்ளதால் இப்பாதிப்பு இலங்கையையும் பாதிக்கவே செய்யும்.

சின்கிலேயர் பீற்றர்

## முடிமன்னனாக...

(டெய்லி நியூஸ், ஜூலை, 1987).

அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நிகழ்த்தும் உரையை 'சிம்மாசனப பிரசங்கம்' என்றே அழைத்தன.

### புதிய அரசின் முன்னுரிமைகள்

புதிய அரசு பதவிப் பிரமாணம் எடுத்தது. மீளவும் இனவன்செயல தீர்வை விழுங்கியது. யாழ்ப்பாணத் தமிழர்களைப போல் அல்லாமல் இந்தியத் தமிழர் யு என். பிக்கு வாக்களித்தனர். புதிய வன்செயல் இந்தியத் தமிழரைப் படுமோசமாகத் தாக்கியது தேர்தலின் பின் வெற்றி மயக்கத்தில் திளைத்திருந்த அரசு மடத்துணிச்சலுடன் நாட்டில் நடப்பவற்றுடன் தொடர்பு கொள்ளாது இருந்ததால், இந்தியத் தமிழ் ஆதரவாளர்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்க முடியவில்லை. இந்தியத் தமிழர்கள் ஆயிரக்கணகில் வட பகுதியிலுள்ள பிரிவினைவாதிகளுடன சோந்து கொண்டனர். இனக்கலவரத்தின் போது 98 தமிழரும் (அதிகமாக இந்தியர்) 38 சிங்களவரும் உயிரிழந்தனர்

ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரதமராகப் பதவிப் பிரமாணம் ஏற்று சுமார் ஒரு மாதத்துக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது, ''கலவரங்களுக்கான காரணம் எனக்குத் தெரியவில்லை'' என்றார்.சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டப போவதாகக் கூறியவரின் வெளிப்பாடு ஆச்சரியததுக்குரியது (மாநாடு கூட்டப்படவில்லை ) இனப்பிரச்சினை குறித்து ஜே ஆர். பெரியளவில் அக்கறை கொள்ளவிலலை.அதன் விளைவு இனப்பிரச்சினை சம்பந்தமாக அவர் அதிகம் தகவல் பெற்றிருக்கவுமிலலை. ஜே. ஆர் இனப்பிரச்சினையில அக்கறை கொள்ளாதிருந்ததும், தகவல் இன்மையும் நீண்டகாலம நீடித்தன. காலம தாழ்த்தி செப்ரெமபர் 1981 இல் ஜனாதிபதி எலற வகையில இந்தியா ருடே சிரேஷ்ட ஆசிரியா எஸ். வெங்கட நாராயணனுக்குப் பினவருமாறு கூறுகிறார்: 'இருபது பொலிஸார் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொல்லப்பட்டதின விளைவுதான் இநதக் கலவரம். அவர்களில் அநேகம் பேர் சிங்களவர். சிலா தமிழா. (டெய்லிநியூஸ் செப்ரெம்பர், 7, 1981) ஜே. ஆர். 'தனது வீட்டுப் பாடத்தைச் சரியாகப் படித்திருந்தால் 20பொலிஸார் கொலை செய்யப்பட்டதாக சரியாக அவா கூறிய எண்ணிக்கையில், 13 பேர் தமிழர், ஒரு முஸ்லிம் மற்றும் 6 சிங்களவர் என்பது தெளிவாகியிருந்திருக்கும். பொலிஸாரைக் கொன்றது மாத்திரம் வன்முறைகளுக்கான காரணமாக அமையாது. 1972 அரசியல் யாப்பின் விளைவுகள் பலவற்றில் இக்கொலைகளும் ஒன்றாகும். அத்துடன் தமிழ்த் தலைவர்களுடன் பேசுவதையும் அரசு விரும்பவில்லை.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தீபகற்ப இளைஞர்களுக்கு உணர்வூட்டிய பெரும்பான்மைச் சமூகத்துக்கு எதிரான ஒரு கருத்தை ஆழமாகப் பதியவைத்துள்ளார்கள். அதேவேளை தனிநாடு கோரும் பிரசாரம் ஒன்று அனைத்துலக ரீதியாக மேற்கொள்ளப்பட்டது. ஹிட்லரைப் பற்றி அல்பேட் ஸ்பென்சர் Inside the Third Reich என்ற நூலை எழுதியுள்ளார். அந்த நூலில் கூற படடிருப்பதாவது:ஹிட்லர் ஜெர்மானிய பத்திரிகைகளின் ஆசிரியர்களின் முன்னிலையில யுத்தத்திற்கு சில மாதங்களுக்குமுன் உரை நிகழ்த்தினார். 'சில விஷயங்களைப் பத்திரிகைகள் முன் வைக்கிற முறையில் மக்கள் தாமாகவே ஒரு முடிவுக்கு வரவேண்டும். விஷயத்திற்குச் சுமூகமாகத் தீர்வுகாண வேறு வழி இலலை என்றால் பலத்தின் மூலம் அதைச் செய்தாக வேண்டும்,விஷயங்களை அதன் வழியில் விடக்கூடாது'' என்றார் யாழ்ப்பாணத் தலைவர்கள் இந்த வாசகங்களை ஒருபாடமாக ஏற்றிருக்கிறார்கள் போலும்.

முந்திய அரசு இனப்பிரச்சினை குறித்து அக்கறை கொள்ளாது இருந்ததற்கும், ஜனாதிபதிக்கு இனப் பிரச்சினைக்கான காரணம் (நான்கு வருடங்கள் பதவியில் இருந்த பிறகு) தெரியாமல் இருந்ததற்கும் வித்தியாசம் இல்லை.

ஜே. ஆர். பிரதம மந்திரியாக பதவி ஏற்று, ஜூலை 23, 1977 இல் தனது அமைச்சரவையை அறிவித்தார். அன்று மாலை 9மணியிலிருந்து காலை 5மணி வரை கண்டி. மாத்தறை திவலப்பிட்டியா. மினுவாங்கொட மற்றும் நித்தம்புவ ஆகிய இடங்களில் ஊரடங்கு அமுல படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் இதற்கு விதிவிலக்கு,

அவர் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்தது முதல் அவர் போக்கு சர்வாதிகாரத்துக்கு அண்மித்ததாகவும், முடியாட்சித்தன்மை கொண்டதாகவும் இருந்தது.

இனப்பிரச்சினைகள் தீர்வுக்குப் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று. பிரதமரின் கவனத்தை ஈர்த்த முக்கியமான முன்னுரிமைகள் இப்போது இருந்தன.

-கருத்து வேறுபாடு மற்றும் கண்டனம் எந்த மூலத்திலிருந்துவந்தாலும் இல்லாது செய்தல்

•தனது அரசியல்எதிரிகளை, குறிப்பாக மிகவும் பயங்கரமான அரசியல் எதிரி என ஜே,ஆர்.கருதிய திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்காவைசெயலிழக்கச் செய்தல். புதிய யாப்பொன்றை அமைத்துத் தன்னைப் பலம் வாய்ந்தஓர் ஆட்சியாளராக்குதல்.

வியாபார சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சார்பான ரைம்ஸ்நிறுவனத்தைச்சேர்ந்த பத்திரிகைகள் அரசுடமையாக்கப்பட்டன.பிரதமராகப்பதவி ஏற்றுப் பத்து நகள்களில் இது நடந்தேறியது. (இந்தச் சட்டத்தைச் சாடிய ஜே ஆர். இச்சட்டத்தில் திருத்தம் செய்யப் போவதாக ஏலவே கூறியிருந்தார்) பத்திரிகைகளைப் பொறுப்பேற்ற பிறகும் பத்திரிகைச் சுதந்திரத்தில் தனக்கிருந்த நம்பிக்கை பற்றி ஜே ஆர். பகிரங்கமாகக் கூறத் தவறியதிலலை பத்திரிகைச் சுதந்திரம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அவசியம் என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தார்.

ஒக்ரோபர் 4, 1977 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் யாப்பில் திருத்தம் செய்யப்பட்டு பதவியிலிருந்த பிரதமர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக்கப்பட்டார்.அதேவேளை பிரதமருக்குரிய அதிகாரங்களையும் அனுபவித்து வந்தார் புதிய யாபபொன்றைத் தயாரிப்பதற்காகப் பாராளுமன்றத் தெரிவிக் குழு ஒன்று அமைக்கப் பட்டது.

விசேஷ ஜனாதிபதிஆணைக்குழுக் கூடடம் 1978 இல்: 7 நிறைவேறறப்பட்டது. இந்த ஆணைக்குழுவிற்கு இரண்டு உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ஒரு சாதரண நீதிபதி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்த நியமனம் மார்ச் 29, 1978 இல் செய்யப்பட்டது. 1970 ஜூலை முதல் 1977 ஜூலை வரை இடம் பெற்ற அதிகாரத துஷ்பிரயோகம்பற்றித்தகவல் சேகரிக்கவே இந்த ஆணைக்குழு.

நித்திய

ரம் வரை அனைத்துப் பிரச்சினைகளிலும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் தேசிய முன்னணிக் கட்சிகளும் பாரதிய ஜனதாவும் இபபோது ஒரே குரலில் பேச முற்பட்டுள்ளன. இந்தப் பிரேரணை தோல்வியுற்று விட்டாலும்

இதே போக்கு தொடர்ந்து நீடிக்குமானால் நரசிம்மராவ் அரசு சங்கடங்களைச் சந்திப்பது நிச்சயம். தேர்தல்களின் போது கிராமப் புறங்களில் காணப்படும் வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவது போன்ற மோசடிகள் தலைநகர் வந்து விட்டதை இந்த வாக்களிப்பு காட்டுவதாக ஜனதாதள் தலைவர் வி பி சிங்கும், ஊழல் மலிந்த அரசு பிரேரணையைத் தோற்கடிக்கவும் ஊழல் வழிமுறைகளையே கையாண்டிருக்கின்றது என்று பாரதீய ஜனதாவின் ஏ பி. வஜ்பாயும் கூறியிருப்பினும் கூட எதிர்காலத்திலும் இத்த போன்றதான ஒத்த கருத்துக்கள் வெளியிடப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதே. தமது செயற்பாடுகளுக்கு எத்தகைய கொள்கை விளக்கங்களை எந்த நேரத்தில், எந்த வடிவில் வெளியிடுவார்கள் என்று எதிர்வு கூற முடியாது இந்திய இடதுசாரிகள், பாரதீய ஜனதா போன்ற தீவிர இந்து மதவாதிகளுடன் ஒத்துழைப்பதும் நீண்ட காலத்திற்கு நீடிக்கக் கூடிய ஒன்றல்ல எனவேதான் அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவதன் மூலமாகவேனும் நரசிம்மராவ் அரசு நித்திய கண்டமாக சோதனைகளை எதிர்கொண்டாலும் பூரண ஆயுசாக பதவிக காலத்தைப் பூர்த்தி செய்யக் கூடும்.

### எதிர்பார்ப்பு

நரசிம்மராவ் மீது பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா ஊழல் புகார் சுமத்தியது முதல் தமது உட்கட்சிப் பூசலை ஓரங்கட்டி விட்ட காங்கிரஸ்கட்சி தனது தலைமையை பாதுகாக்க விரைந்து செயற்படுகின்றது என்பது இப்போது மீண்டும் நிரூபணமாகியுள்ளது பிரதமர் பதவிக்கு குறிவைத்திருக்கும் அமைச்சர் அர்ஜுன் சிங்கும், மகாராஷ்ட்ரா முதல்வர் சரத்பவாரும் இன்னும் காங்கிரஸ் கட்சியினுள் நீடிக்கும் கோஷ்டி மோதல்களின் மூலவர்களும் நரசிம்மராவிற்கு முண்டு கொடுப்பதில் முனைந்து நின்றுள்ளனர். ஹர்சத் மேத்தாவின் குற்றச்சாட்டையே பாரதீய ஜனதாவின் சதி என்று வர்ணிக்கும் காங்கிரஸ் இந்த வெற்றிமூலம் தனது களங்கம் களையப்பட்டு விட்டதாக மனப்பால் குடிப்பது வெறும் பிரமையாகவே இருக்கலாம் ஆனால் இந்த வெற்றி அஜித்சிங்கிற்கும், ஜெயலலிதாவிற்கும் பெரும் இழப்பாக இருக்கும் என்று டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சுட்டிக் காட்டியிருப்பதும், மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றத்தை காங்கிரஸ் விரைவில் ஏற்படுத்தும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியிருப்பதும் ஊன்றிக் கவனிக்கத்தக்கவையாக இருக்கும்.


## முக்கிய அறிவித்தல்

இடை நிறுத்தப்பட்டிருந்த தேர்த்திருப்பணி 30.7.93 வெள்ளிக்கிழமையிலிருந்து நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணி செவ்வனே நிறைவேற அடியார்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் தங்களது பங்களிப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்த்திருப்பணிச் சபை
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருநெல்வேலி.

(5566)

# மோசமடையும் அரசியல் சூழ்நிலையும் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதமும்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காவலிலுள்ள போர்க் கைதிகள் விவகாரம் மீண்டும் முக்கிய அரசியல் விவகாரமாகியுள்ளது. 'விடுதலை அல்லது மரணம்' என்ற 'உறுதிப்பாட்டுடன்' காவலிலுள்ள போர்க் கைதிகள் ஆரம்பித்திருக்கும் இச் சாகும்வரை உண்ணாவிரதம் கடந்த முறைபோல் அல்லாமல் பெரும் அரசியற் சிக்கலையும், நெருக்கடியையும் உருவாக்கலாம் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

கடந்தமுறை அரசாங்கம் தம்மை ஏமாற்றி விட்டதாகப் போர்க்கைதிகள் கருதுவதும், கடந்தமுறை நிலவிய அரசியற் சூழ்நிலை தற்பொழுது நிலவாமையும் நெருக்கடி வலுவடையக் காரணமாகலாம் எனவும் கருதப்படுகிறது.

கடந்தமுறை போர்க்கைதிகள் உண்ணாவிரதம் தொடங்கிய வேளை, அவர்களின் விடுதலை தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி தனக்குத் தடை ஏதும் இருந்ததாகக் கருதவில்லை. அதன் வெளிப்பாடாகவே பிரிகேடியர் வீரசேகராவை கைதிகள் தொடர்பான பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் அனுப்பினார்.

யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் வீரசேகரா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டிற்கு வந்திருந்தார். அதன் பிரகாரம் கைதிகளை விடுதலை செய்வதற்கு விடுதலைப் புலிகளும், வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையைத் தளர்த்த அரசாங்கமும் ஒப்புக்கொண்டன. இதன் பிரகாரம் எரிபொருள்கள் உட்படப் பல பொருள்களை வடபகுதிக்கு அனுப்ப அரசு சம்மதித்தது.

டி. பி. விஜயதுங்காவின் இம்முடிவு குறித்து அப்பொழுது ஆச்சரியப்பட்டவர்களும் பலர் உண்டு. சிங்களப் பேரினவாதத்தையும், சிறிலங்கா இராணுவத்தையும் மீறி ஜனாதிபதி டி. பி.விஜயதுங்காவால் இம்முடிவை எவ்வாறு எடுக்க முடிந்தது எனவும் பலர் கேள்வி எழுப்பியதுண்டு.

ஆனால் பிரிகேடியர் வீரசேகரா ஜனாதிபதியின் சம்மதத்துடன் விடுதலைப்புலிகளுடன் உடன்பாடு செய்து கொண்ட பின்னர்தான் விவகாரமே பூதாகரமானது. சிங்களப் பேரினவாதமும், இராணுவமும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவையும், அரசாங்கத்தையும், அச்சுறுத்தத் தொடங்கின. அதன் பின்னரே ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா தமது அதிகாரத்தின் எல்லையை உணர்ந்து கொண்டார்.

இந் நிலையில் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட உடன்பாட்டைக் கைவிட்டதன் மூலம் போர்க் கைதிகளையும் கை கழுவியது. இதன் மூலம் சமாதான உடன்பாடு ஒன்றின் மூலம் கைதிகள் விடுதலை பெறக்கூடியதாக இருந்த ஒரு சுமுகமான சூழ்நிலையும் மறைந்தது.

இதன் பின்னர் தற்பொழுது சுமார் ஒன்றரை மாதங்கள்கழித்து கைதிகள் மீண்டும் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். கைதிகளின் இம்முடிவானது சிறிலங்கா அரசாங்க மற்றும் இராணுவ தரப்பிற்கும், முன்னர் சமாதான முயற்சிகளை மேற்கொண்ட மத குருமார்களுக்கும் அறிவிக்கப்பட்டும் உள்ளது.

ஆனால், இதற்கு முன்னரே, அதாவது, தமது விடுதலை தொடர்பாக உடன்பாடு முறிவடைந்ததைத் தொடர்ந்து, தம்மை விடுதலை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கைதிகள் அரசாங்கத்தைக் கோரிவந்தனர். ஆனால், அரசாங்கம் அது குறித்து மௌனம் சாதித்ததோடு, கைதிகள் விடுதலை குறித்து முயற்சிகளை மேற்கொள்ள சில நல்லெண்ணக் குழுக்கள் தயாராக இருந்தபோதும் அதற்கு ஒத்தாசையும் வழங்க முன்வரவில்லை.

இதே வேளை, கைதிகள் விடுதலைக்கு உகந்த சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கு மாறான ஒரு சூழ்நிலையே அரசியல் கட்சிகளும், தீவிர பேரினவாதக் குழுக்களும், இராணுவமும் உருவாக்கிவந்தன. இவை சமாதான முயற்சிகளை மேற்கொண்டவர்கள் மீதும், அதற்கு உதவியவர்கள் மீதும் பலத்த கண்டனங்களைத் தொடுத்ததோடு, நல்லெண்ண சூழ்நிலை உருவாவதற்கான வழிகளையும் அடைக்க முற்பட்டன.

## சமாதான முயற்சிகள் தோல்வி

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் சமாதான நல்லெண்ண சூழலை உருவாக்கவும் பலர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதுதொடர்பாக அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ, மனிதவளப் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் வண. மாதம்பாகம அஸாஜி தேரோ போன்றவர்கள்யாழ்ப்பாணத்திற்கு விஜயங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

> **யுத்தக் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதம் பாதகமான ஓர் அரசியற் சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இது பல அரசியல் நெருக்கடிகளை உருவாக்கக் கூடும்.**

இந்நிலையில் கைதிகள் தொடர்பான விவகாரம் முக்கியம் பெற்று இருந்ததோடு, சமாதான சூழலுக்கான ஒரு முன் முயற்சியாக கைதிகள் விவகாரம் அமையக் கூடும் எனவும் கருதப்பட்டது. விடுதலைப் புலிகளும் கைதிகள் விவகாரத்தை ஒரு சமாதானத்திற்கான முன் முயற்சியாகவே மேற்கொண்டிருந்தனர். இதனை பிரிகேடியர் வீரசேகராவிடமும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அவ்வாறாகக் கருதவில்லை என்றே கூறவேண்டும். சிங்கள பேரினவாதப்பத்திரிகைகளும், சிங்கள அரசியல் வாதிகளும் இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதிலேயோ அன்றி இனங்களில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவதிலேயோ அக்கறை கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக சமாதான முயற்சிகளிலும், நல்லெண்ண முயற்சிகளிலும் ஈடுபடுபவர்களே பேரினவாதத்தின்பெரும் கண்டனத்திற்கும் உள்ளாக வேண்டிய நிலையே ஏற்பட்டது. இந் நிலையில் அவர்களின் முயற்சிகள் தோல்வியைத் தழுவின.

## சர்வதேச செஞ்சிலுவை மீது குற்றச்சாட்டு

மேலும், கைதிகளின் பெற்றோர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்தது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பௌத்த பேரினவாதத்தின் பெரும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உறுதுணையாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செயற்படுவதாகவும், கைதிகளின் பெற்றோர்களை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்றதன் மூலம் தவறு செய்து விட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டுகள் தனியாக தீவிர பேரினவாத குழுக்களிடம் இருந்து வரவில்லை. கொழும்பிலிருந்துவரும் பேரினவாதப் பத்திரிகைகளிடம் இருந்தும், எதிர்க்கட்சிகளிடம் இருந்தும் ஏன் சில அரசதரப்பு அரசியல் வாதிகளிடமிருந்தும் வெளிவந்தன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மீதான இக் குற்றச்சாட்டானது கைதிகள்விடுதலை தொடர்பாக இச் சங்கத்தின் செயற்பாட்டிற்கு பல வரையறைகளை இனிமேல் விதிக்கலாம் என்றே கருதப்படுகின்றது. அதாவது கடந்தமுறை பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கும், பேச்சுவார்த்தை இடம் பெற்றபோது விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஆற்றிவந்த பங்கை இம்முறை இச்சங்கம் ஆற்றுமா என்பதும் கேள்விக்குரியதென்றே.

இவ்வாறான இந்நிலையில், தகவல் தொடர்பு பரிமாற்றம் பாதிப்படையுமானால், பேச்சுவார்த்தைகளோ, அன்றிச் சமரசமுயற்சிகளோ பெரியளவில் பாதிப்படையும் என்றே எதிர்பார்க்கலாம்.

## மோதல்கள் அதிகரிப்பு

அடுத்ததாக, கடந்த இரு வாரங்களாக விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல்களும் அதிகரித்துள்ளன. கடந்த முறை பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கு முன்னதாக சுமார் ஆறு மாதங்கள் ஓரளவு அமைதியான சூழ்நிலை ஒன்றே நிலவியது. மோதல்கள் வெகுவாகக்குறைந்திருந்தன. இதனால் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது இராணுவத்தரப்பு உடன் எதிர்க்கவில்லை. ஆனால், இம்முறை இராணுவம் அவ்வாறு செயற்படுமா என்பதும் கேள்விக்குரியதொன்றாகவே இருக்கும்.

## இனப்படுகொலைகள்

இவையாவற்றிற்கும்மேலாக சிறிலங்கா ஆயுதப்படையினர் இவ்வாரம் மேற்கொண்ட இரு தாக்குதல் சம்பவங்களில் அப்பாவித் தமிழர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கல்வியங்காட்டில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலும், கிளாலிக்கடற்பரப்பில் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையும் சமாதான சூழ்நிலைக்கு மாறான ஒரு சூழ்நிலையை தோற்றுவிக்கக் கூடியவையாகவே உள்ளன.

இந்நிலையில் போர்க் கைதிகளின் உண்ணாவிரதம் காலவரையறையின்றித் தொடருமானால் அதனால்பல அரசியல் நெருக்கடிகள் உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளது. ஆனால் சிங்களப் பேரினவாதசக்திகள் அதனைக் கருத்திற்கொள்ளுமா என்பது சந்தேகமே. பௌத்த பேரினவாதம் கொண்டுள்ள ஆக்கிரமிப்பு வெறியானதுதமக்காகப் போரிட்டவர்களையே முற்றாகக் கைகழுவிவிடும் அளவிற்கு கொண்டுவரினும் ஆச்சரியப்படுவதற்கில்லை

**- ஜெயராஜ்**

---

## சிங்கள

போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களில் 6 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## உறவினர்

பகுதியாக உள்ளே அனுமதிக்கப்பட்டனர். இறந்த உடல்களை அடையாளம் கண்டு உறவினர்கள் கதறி அழுத காட்சி மனதை நெகிழச்செய்வதாக இருந்தது.

ஆஸ்பத்திரி சவச் சாலை, அவசர சிகிச்சைப்பிரிவு ஆகியவற்றுக்கும் சென்றபலர் அங்கு தமது உறவினர்கள் உள்ளனரா என்று ஏக்கத்துடன் தேடிக் கொண்டிருந்தனர்,

(நி) (சி) (தி) (பா)

## கிளாலித்

மா. மாணிக்கசிங்கம் (43) ஆனைப்பந்தி, பொன்னையா கதிர்காமு(80) கோப்பாய், சபாநாதன் மகாலட்சுமி (53) செட்டித்தெரு நல்லூர், கதிர்காமநாதன் ஜெயந்தி (32) உரும்பராய், க பூமணி (50) அச்சுவேலி ஆகியோரே யாழ். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

(தி) (சி) (பா)

## ஆறு சடலங்கள்

டித்தெரு நல்லூர், தம்பியையா இராகிணி (18) ஏழாலை.

மேலும் இரு சடலங்கள் நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காணப்பட்ட சடலங்கள் மரணவிசாரணையின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இறந்தவர்களில் ஒருவரான சண்முகம் சபாநாதன் என்பவரின் மனைவி மகாலஷ்மி காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதே சமயம் இறந்தவரான ஜெயந்தி கதிரவேலு என்பவரின் தாயாரான கதிரவேலு பூமணி தமது மகள் இறந்துவிட்ட செய்தியை அறியாத நிலையில் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், (சி) (நி) (பா)

## படகிலிருந்த

ருடன் பிடிக்கப்பட்டார்.

இவரை தமது படகில் ஏற்றிக் கொண்டு கடற்படையினர் சென்று விட்டதாகவும் இவரின் பெயர் விவரங்கள் ஏதும் தெரியவில்லை எனவும் உயிர் தப்பிய பயணிகள் தெரிவித்தனர்.

## புலிகள் பாதுகாப்பில் பொருள்கள்

நேற்றுக் காலை கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பொது மக்களின் சொத்துக்கள், பொதிகள் என்பன விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. இவை கிளாலிக் கரையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

## தாக்குதலில் தப்பியோர்

கிளாலி கடற்பரப்பில் நேற்று அதிகாலை 2 பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டபோது எட்டு பொது மக்கள் எதுவித காயமுமின்றி தப்பித்துக் கொண்டனர்.

இதன்போது தப்பியோர் விபரம்:

கணபதிப்பிள்ளை பீதாம்பரம் (சங்குவேலி) இ. ஞானப்பிரகாசம் (யாழ்ப்பாணம்) பொன்னையா தர்மலிங்கம் (கோண்டாவில்), க. பாலசிங்கம் (கொக்குவில்), பி. ஜெயச்சந்திரன், (அச்சுவேலி), இராசரத்தினம் இராசேந்திரம் (குருநகர்), இராசதுரை சுஜினி (புத்தூர்), சிறிகாந்தன் நாகேஸ்வரி (சண்டிலிப்பாய்) (நி)

## வலி வடக்கில் சிக்கியிருந்த 19 பொதுமக்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்

மாதகல் இளவாலை அதை அண்டிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பில் சிக்கியிருந்த பத்தொன்பது பேர் விடுவிக்கப்பட்டு 'குமண' கப்பல் மூலம் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர்.

இராணுவத்தினரால் பதினொரு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் வந்து சேர்ந்தனர். இவர்களில் மூவர் நடக்க முடியாத வயோதிப நோயாளிகள் ஆவர். இவர்கள் யாழ். போதனாவைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டனர்.

சிவனேசன் - வன்னித்தம்பி (நோயாளி) சிவானந்தம, தெய்வானை பொன்னம்பலம்-சரஸ்வதி, அம்பலவாணர்-அன்னமகள், அம்பலவாணர்- அமிர்தநாதன், சு. முருகேசு, கந்தையா, சின்னத்தம்பி (நோயாளி), நாகநாதன் கதிரவேலு, பி. பிரான்சிஸ், ம. ஜெயரட்ணம், மேரிமாகிரட், யோ புலேந்திரன், ஆ. கணபதிப்பிள்ளை, சி முருகன், ரா. வல்லி. வே மாணிக்கம், பெ. வன்னியன், அ. தம்பிப்பிள்ளை, கென்றி-ஞானப்பு (நோயாளி) ஆகியோரே நேற்று விடுவிக்கப்பட்டு வந்தவர்களாவர். இவர்கள் தமது உடைமைகள், துவிச்சக்கரவண்டிகளையும் எடுத்து வந்தனர்.

(யோ)

## மன்னார் மாவட்டத்தில் புக்காரா தாக்குதல்!

மன்னாரில் நேற்றுக் காலை புக்காரா விமானம் ஒன்று தாக்குதல் நடத்தியது. நேற்றுக் காலை 10. 30 மணியளவில் முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதியில் புக்காரா ஆறிற்கும் மேற்பட்ட ரொக்கட்டுகளை ஏவியது. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம்தெரியவரவில்லை.

# கிளாலிக் கடலில் நடந்த பயங்கரம்
# உயிர் தப்பியவர்கள் தரும் அதிர்ச்சித் தகவல்

[சசிகரன்]

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலால் உடல் சிதறிப்பலியானவர்களின் இரத்தத்தை அள்ளி என் உடலில் ஊற்றிவிட்டு இறந்தவர்போல் அசைவற்றுக் கிடந்து தப்பித்துக் கொண்டேன்.

இவ்வாறு நேற்று அதிகாலை கிளாலிக் கடற் பரப்பில் சிறிலங்காவின் கடற்படைப் பீரங்கிப்படகுகள் நடாத்திய கோர தாக்குதலின் போது மயிரிழையில் தப்பி வந்த கோண்டாவில் மேற்கைச்சேர்ந்த பொன்னையா தர்மலிங்கம் (வயது 65) என்பவர் நமது நிருபருக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

மிகுந்த பரபரப்பிற்கு மத்தியில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவர் நமது நிருபருக்கு மேலும் இது தொடர்பாக விபரிக்கையில்-

எனது படகில் 16 பேர் பயணம் செய்தோம். அதிகாலை 2 30 மணியளவில்ஆலங்கேணியில் இருந்து புறப்பட்ட எமது படகு சிறிது தூரம் வரை துடுப்பின் உதவியுடன் வந்தது பின்னர் எஞ்சினின் உதவியுடன் வந்து கொண்டிருந்த போது அது பழுதடைந்ததனால் மற்றைய படகுடன் இணைத்து இழுத்து வந்தனர்

## பாய் உதவியுடன்படகு

சுமார் 30நிமிடம் வரைஓடிய பின்னர் அதுவும் பழுதடைந்ததால் இரண்டு படகுகளின் ஓட்டிகளும் துடுப்பு, பாய் ஆகியவற்றின் உதவியுடன் அல்லிப்பளை நோக்கி மெதுவாக செலுத்திக்கொண்டிருந்தனர்.

படகுகளின் எஞ்ஜின்கள் பழுதடைந்து விட்டதாக ஓட்டிகள் கூறினர். அப்போ நான் அவர்களிடம் ''தம்பியவை விடியப் போகிறது. இனி பாதுகாப்பு இருக்காது. ஆனபடியால் எமக்கு பயமாக இருக்கிறது. ஆமி வந்தால் தப்ப முடியாது. நீங்கள் படகைத் திருப்பி வந்த வழியே விடுங்கள். எங்களுக்கு ஒன்றும் அவசரமில்லை. நாளைக்கு நாங்கள் யாழ்ப்பாணம் போகலாம்'' என்றேன். அவர்களோ ''நீர் சத்தம் போடாமல் இரும். எங்களுக்கு எல்லாம் தெரியும் நாம தினமும் போய் வருகிறோம். நாங்கள் உங்களைக் கொண்டு போய் விடுவோம்'' எனக்கூறியவாறு மெதுமெதுவாகஓட்டிக்கொண்டிருந்தனர்.

## எண்ணெய் இல்லை

இருபடகுகளின் நான்கு ஓட்டிகளும் கதைத்துக்கொண்டு வந்ததில் இருந்து இவர்கள் எண்ணெய் இல்லாமலே வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

## ஆனையிறவிலிருந்து

திடீரென ஆனையிறவு முகாம் பகுதியிலிருந்து தேடுதல் வெளிச்சம் ஒன்று எமது படகை நோக்கி பாய்ச்சப்பட்டது. சில நிமிடங்களில் அது நின்று விட்டு மீண்டும் பாய்ச்சியது இதன் போது படகில் இருந்தவர்கள் பயப்பீதியால் கத்தத் தொடங்கினார்கள் அப்போது ஓட்டிகள் இரு படகுகளிலும் கட்டியிருந்த இணைப்பை அறுத்துவிட்டு கடலில் குதித்து விட்டனர்.

## படையினரின் படகுகள்

இதனைத் தொடர்ந்து சிறிது நேரத்தில்.—

மோட்டார் இரையும் சத்தம் கேட்ட சில வினாடிகளில் சிவப்பு நிற ஒளிப்பிளம்புகள் எமது படகை நோக்கி வந்து வீழ்ந்து வெடித்தன. இதன் போது படகிலிருந்தவர்கள் நாம் அப்பாவிகள் எங்களை சுடவேண்டாம் எனக் கத்தினர் அப்போது நானும் மற்றொரு இளைஞனும் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு எதிர்ப்புறமாக கடலில் குதித்து படகின் மேல் விளிம்பில் பிடித்துக் கொண்டு நின்றோம். அப்போது மற்றொரு படகு நாம் நின்ற பக்கமாக வந்து தாக்கத் தொடங்கியது. இதனால் நாம் மீண்டும் படகினுள் பாய்ந்தோம். படகினுள் பாயும் போது என்னுடன் பாய்ந்த இளைஞனின் தலையில் வெடிவிழுந்தது. இதனால் அவரது தலை ஒரு புறம் சிதறியதுடன் இரத்தம் சீறியது. அவர் படகினுள் வீழ்ந்தார். அப்போ அதற்குள் இருந்த நடுத்தரவயதுடைய பெண்மணி ஒருவரின் தலை எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி சிதறியது. படகினுள் இரத்தம் ஆறாகப்பாய்ந்தது.

## இரத்தம் பூசினேன்

பீரங்கிப் படகுகள் நெருங்கி வருவதை உணர்ந்த நான் படகினுள் நிரம்பிக் கிடந்த இரத்தத்தை இருகைகளாலும் அள்ளி என் நெஞ்சிலே ஊற்றிவிட்டு வீழ்ந்து இறந்தவன் போல் கிடந்தேன்.

## கறுப்பு உடையுடன்

கறுப்புஉடை அணிந்த நடுத்தர வயதை உடைய ஒருவர் கையில் வளைந்த கத்தியுடன் எமது படகிற்குள் பாய்ந்தார். அப்போது அதற்குள் இருந்த இளம் யுவதி ஒருவர் இருகைகளையும் கூப்பியவாறு ''என்னை ஒன்றும் செய்யவேண்டாம். என்னை ஒன்றும் செய்ய வேண்டாம்'' எனப் பல தடவைகள் கூறிக் கொண்டிருந்தார். நான் ஒரு கண்ணை மட்டும் இடைக்கிடை மெல்ல மெல்ல திறந்து அவதானித்துக் கொண்டு கிடந்தேன்.

அவர் தான் கொண்டு வந்த கத்தியால் படகை பல தடவைகள் கொத்தியது தெரிந்தது. சிறிது நிமிடங்களில் திடீரென படகினுள் நீர்புகத் தொடங்கியது. படகினுள் நிறைந்து கிடந்த இரத்தத்துடன் கடல் நீரும் சேர்ந்து கொண்டது.

## தீ வைப்பு

இது நடை பெற்றுக் கொண்டிருந்த போது ஏனைய படகுகளில் இருந்த கடற்படையினர் சிங்களத்தில் ஏதோ அவசரஅவசரமாகக் கட்டளை பிறப்பித்தனர். அதற்கமைய எமது படகில் நின்றவரும் செயல்பட்டார். அவர் அங்கிருந்த மண்ணெண்ணெய் எடுத்து படகினுள் கிடந்தவர்கள் மீது ஊற்றினார். பின்னர் தமது படகில் ஏறிக் கொண்டார்.

சில வினாடிகளில் என் தொடைப்பகுதியில் திடீரென நெருப்பு பிடிப்பது போன்ற உணர்வு தென்பட்டது நான் படகு தீமூட்டப்பட்டதை உணர்ந்து கொண்டேன். மெதுவாக எனது கையால் அப்பகுதியை தேய்த்தேன். அப்போ படகில்இருந்த இளம் யுவதி ''ஐயா அவங்கள் போறாங்கள்'' என கூறியதும் நான் படாரென துணியில் பற்றிய தீயை அணைத்து விட்டேன்.

## இரத்த வெள்ளத்தில்

அப்போ நான் அந்த யுவதியை நிமிர்ந்துபார்த்தபோது அவரது கழுத்திலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது. எனக்கு என்னசெய்வதென்றே புரியவில்லை. எங்கே இருந்தவர்களைக் காணவில்லையே எனக் கேட்டேன். அந்தயுவதி கூறினார்ஒருபொடியனை அவங்கள் பிடித்துக்கொண்டு போகிறாங்கள் மற்றைய ஆம்பிளையள் கடலிலேகுதித்து விட்டார்கள் என்று. இரு பிள்ளைகள் இருந்தார்களே என்ற போது அந்தப்பிள்ளை கையை காட்டியது. அந்த திசையிலே பார்த்தபோது அவ் இரு பிள்ளைகளும் தலைகுப்புற இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். மற்றொரு பெண்மணி மட்டும் காயங்களுடன்முனகிக் கொண்டிருந்தா.

## மற்றைய படகு

எமது படகு அலைகளால் அடித்தவாறு திசைதெரியாது மெல்லமெல்ல அசைந்து கொண்டிருந்தது. சில நிமிடங்களில் சற்றுத்தள்ளி மற்றோர் படகு அசைந்து கொண்டிருந்தது. நான் உடனே அந்தப் படகை நோக்கி இரு கைகளாலும் சைகை காட்டிவாறு உரத்த குரலில் இங்கே பலர் துடிதுடிக்கிறார்கள் வந்து காப்பாற்றுங்கள் எனக் கத்தினேன் அப்போ அப் படகிலிருந்தவர்கள் எம்மை வருமாறு சைகை காட்டினார்கள் பின்பு தான் புரிந்தது அப்படகும் எம்மைப் போன்று தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறது என்று சிலநிமிடங்களில் பூநகரி பக்கமாக இருந்து மிகத் தூரத்தில் கறுப்பு நிறத்தில் ஒருஉருவம் தெரிந்தது. அது கடற்படையின் படகுஎன ஊகித்துக்கொண்ட நான் திரும்பவும் வருகிறார்கள் நாங்கள் இனி தப்பமுடியாது எனக் கூறினேன். அப்போ அந்த இளம்யுவதியும், பெண்மணியும் சேர்ந்து உங்கள் உடை மூலமாவது சைகை காட்டுங்கள் என்றனர். நான் படகிலிருந்தவாறே இரு கைகளாலும் எனது சேட்டைப்பிடித்து அசைத்தவாறு சுடவேண்டாம். நாம் அப்பாவிகள் எனக்கத்தினேன் சிலவினாடிகளில் விரைந்துவந்த படகு ஒன்று எமக்கு அருகில்வந்து நின்றது நான்தலையை குனிந்தவாறே தொடர்ந்தும் கத்தினேன்.

## கடற்புலிகள் வந்தனர்

அப்போது ''நீங்கள் பயப்படாதீர்கள் நாங்கள் வந்து விட்டோம் எனக் கூறியவர்கள் எமதுபடகை தமது படகுடன் இணைத்தவாறு எம்மை கரையில் கொண்டுவந்து சேர்த்தனர். அதன் பின்புதான் அவர்கள் கடற்புலிகள் என்பது தெரிந்தது என அவர் தமது அனுபவத்தை விபரித்தார்.

# சுட வேண்டாம் என கெஞ்சியும் துப்பாக்கிச்சூடு விழுந்தது

(திலீபன், பார்த்திபன்)

சிங்கள மொழியில் பேசியபடி எமது படகை நோக்கி கடற்படையினர் சரமாரியாகச் சுட்டனர். படகில் வந்த ஏனையவர்களும் நானும் எம்மைத் தாக்க வேண்டாம். நாம் அப்பாவிகள் என்று கூறி மன்றாடினோம். கடற்படையினர் தொடர்ந்து கொடூரமாக எமது படகை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நான் அணியத்திற்கு அருகில் வீழ்ந்து கிடந்து மயிரிழையில் உயிர் தப்பினேன்.

இவ்வாறு நேற்றுஅதிகாலை கிளாலிக் கடலில் கடற்படையினரின் தாக்குதலிலிருந்து தப்பி வந்தவர்களில் ஒருவரானகணபதிப்பிள்ளை பீதாம்பரம் என்ற வயோதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். சங்குவேலி, விக்ரர் ஒழுங்கையைச் சேர்ந்த இவர், எமது செய்தியாளருடன் பேசும்போது அதிர்ச்சியடைந்தே காணப்பட்டார். அவர் தமது அனுபவத்தை விபரித்தார்.

அதிகாலை 2.45 மணியளவில் அக்கரையிலிருந்து நான் ஏறிவந்த படகு புறப்பட்டது. இயந்திர கோளாறு காரணமாக பாய்கட்டி மிக மெதுவாகவே படகு வந்து கொண்டிருந்தது. எமது படகுக்கு அருகாமையில் வேறொரு படகும் இதே நிலையில் பாய் கட்டி வந்துகொண்டிருந்தது.

இரு ஓட்டிகள் படகைச் செலுத்திக்கொண்டுவந்தனர். அதிகாலை 4.30 மணியளவில் சரமாரியாக துப்பாக்கி வேட்டுகள் கேட்டன. படகில் இருந்தவர்களில் ஒருவர் அடுத்த படகை கடற்படையினர் தாக்குகிறார்கள் என்றார்.

திடீர் என்று நான் வந்த படகை நோக்கியும் துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ச்சியாகத் தீர்க்கப்பட்டன. இந்தவேளை நான் அணியத்திற்கருகில் பதுங்கிக் கொண்டேன்.

நான் ஏறிவந்த படகில் சுமார் 17 பேர் வந்தார்கள். கடற்படையினர்எமது படகை நெருங்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது பெண்கள் உட்பட அனைவரும் மூன்று மொழிகளிலும் கடற்படையினரை நோக்கி, எம்மைச்சுட வேண்டாம் எனக்கெஞ்சி மன்றாடினோம்.

'எம்மை ஒன்றும் செய்யாதீர்கள். நாம் அப்பாவிகள். சரணடைகிறோம்' எனஅனைவரும் சேர்ந்து கத்தி ஒப்பாரி வைத்தோம்.

தொடர்ச்சியாகசற்று இடைவெளி கூட விடாமல் கடற்படையினர் சுட்டனர். எனக்கு மேல் பலர் வீழ்ந்தார்கள். ரத்த வெள்ளத்தில் நான் கிடந்தேன்.

இறந்தவர்கள் மற்றும்காயப்பட்டவர்களுக்கு கீழே நான் கிடந்ததால கடலில் குதித்துச் சென்று ஓடியவர்களை அவதானிக்க முடியவில்லை ஆனால்- தாக்குதலின் ஆரம்பத்திலேயே ஓட்டிகள் இருவரும் கடலில் குதித்து தப்பிச் சென்றுவிட்டனர்.

எமது படகில் வந்தவர்கள் நான்கு பேர் பலியானார்கள். பலியானவர்களில் இருவர் ஆண். மீதி இருவர் பெண். என்னருகில் அமர்ந்திருந்த ஒருவரின்கை சிதறிப்போனது. வேறொருவர் காலில் காயமடைந்தார். இன்னொருவரும் காயமடைந்தார். என்னுடன் சேர்ந்து நான்கு பேர் தப்பினோம். தப்பியவர்களில் இருவர் பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடற்படையினர் எமது படகைவிட்டு விலகிச் சென்ற பின்னர், எமது படகில் ஏற்றப்பட்டுக் கிடந்த சைக்கிள் ஒன்றை நானும் என்னை மாதிரி காயமற்றவர்களும் கடலில் தூக்கிப் போட்டு விட்டு ஓட்டையாகிப்போன எமது படகிற்குள் புகுந்த கடல் நீரை அள்ளி வெளியே இறைத்தோம்.

அதிகாலையான படியால் விடியும் வெளிச்சத்தில் கரையை நோக்கி துடுப்பை வலித்தும். பாயைச் சரிசெய்தும் எமக்குச் சரியெனப்படும் திசையை நோக்கிப் படகைச் செலுத்தி வந்தோம். கடலில் நடுவில் மேடு மாதிரி காணப்பட்ட இடத்தில் சற்று நிறுத்தி இளைப்பாறினோம். அப்பகுதியில் இறந்த நிலையில் சுமார் நாற்பது ஆடுகளும் பல வெங்காய மூடைகளும் காணப்பட்டன்.

எமக்குத் தண்ணீர்த்தாகம் எடுத்த வேளைகளில் கடல் நீரையே பருகினோம். விடிந்த பின்பும் கடலில் படகை மூழ்காமல், செயல்பட்டுக் கொண்டிருந்தோம். காயப்பட்டவர்களின் ஓலம் காதை அடைத்த போதிலும் நாம் எமது முயற்சியைக் கைவிடவிலலை.

எமக்கு மேல் வானத்தில் ஹெலிகொப்டர் வந்த போது இறந்த மாதிரி படகில் கிடந்தோம். பின்னர் விடுதலைப் புலிகள் எமது படகை இழுத்து வந்து கரைசேர்த்தனர்.

நாம் பகல் 11-00 மணியளவிலேயே கரையை வந்தடைந்தோம். எமது படகிற்கு அருகாமையில் வந்த படகும் கடற்படையினரின் தாக்குதலுககு பெரிதும் சேதமானது. அப்படகில் வந்த வாலிபர் ஒருவரை கடற்படையினர் கடத்திச் சென்றதாக அறிகிறேன்.

# மேல்தளத்தில் நின்ற என் கணவர் தலை பிளந்தது

கடற்படையினரின் படகு எமது படகை நெருங்கியதும் எனது கணவர் படகின் மேல் தளத்தில் நின்றவாறு கையை அசைத்து சிங்களத்தில் நாங்கள் பொதுமக்கள் எங்களை ஒன்றும் செய்யாதீர்கள் என்று உரத்த குரலில் கத்தினார். மறுகணம் கடற்படையினரின் சரமாரியான சூடு அவரின் தலையைப் பிளந்தது. இதை அடுத்து எனது கணவர் படகினுள் வீழ்ந்தார்.

இவ்வாறு நேற்றைய சம்பவத்தில் இறந்தவர்களில் ஒருவரான சபாநாதன் என்பவரின் மனைவி மகாலெட்சுமி நமது நிருபருக்கு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் கடற்படையினரின் படகுகள் எம்மை நெருங்கிவந்தன நான் படகில் குப்புற படுத்துக் கொண்டேன்.

படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். சடலங்கள் என் மீது வீழ்ந்தது. எனது முதுகிலும் காயம் ஏற்பட்டது.

நான் நிமிர்ந்து பார்த்த போது படையினர் எங்களின் படகை நெருங்கிவந்து படகை உடைத்து தீபபந்தம் ஒன்றை படகினுள் எறிந்துவிட்டுச் சென்றனர். அப்போது எமது படகில் உயிருடன் தப்பியிருந்த ஒருவர் அத்தீப்பந்தத்தைத் தூக்கி கடலில் வீசினார்.

(சி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.